திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
ஏப்ரல் 2025,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:09, Pages:56
APRIL-2025, Price Rs.20/-



**திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்**
**10-04-2025 முதல் 12-04-2025 வரை**



திருப்பதி
இரயில் நிலையத்திலிருந்து
சுமார் 15 கி.மீ. தூரத்தில்
அமைந்துள்ள
ஸ்ரீநிவாசமங்காபுரத்தில்
எழுந்தருளும்
ஸ்ரீகல்யாண
வேங்கடேஸ்வர
ஸ்வாமிக்கு 18-02-2025
முதல் 26-02-2025 வரை
நடைபெற்ற
பிரம்மோத்ஸவத்
திருக்காட்சிகள்

திருப்பதி
இரயில்
நிலையத்திலிருந்து
சுமார் 5 கி.மீ.
தூரத்தில்
அமைந்துள்ள
ஸ்ரீகபிலேஸ்வர
ஸ்வாமிக்கு
19-02-2025 முதல்
28-02-2025 வரை
நடைபெற்ற
பிரம்மோத்ஸவத்
திருக்காட்சிகள்





*நைநம் சி$_3$ந்த$_3$ந்தி சஸ்த்ராணி*
*நைநம் த$_3$ஹதி பாவக:।*
*ந சைநம் க்லேத$_3$யந்த்யாபோ*
*ந சோஷயதி மாருத:॥*

**இந்த ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை; நெருப்பு எரிப்பதில்லை; தண்ணீர் நனைப்பதில்லை; மேலும், காற்று உலர வைப்பதில்லை.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–23*

*ஒரு பகல் உலகெலாம் உதரத்து உள்பொதிந்து*
*அருமறைக்கு உணர்வு அரும் அவனை அஞ்சனக்*
*கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை*
*திருஉறப் பயந்தனள் திறம்கொள் கோசலை*

**நல்லியல்புகளும் மேன்மையும் பொருந்திய கோசலை, பிரளய காலத்தில் உலக உயிர்களை தன் வயிற்றில் அடக்கி காப்பாற்றி, அவ்வெள்ள நீரிலே ஆலிலைமேல் ஒரு பாலகனாய் அமர்ந்து இருந்தவனும், வேதங்களால் அறிய முடியாத பெருமை வாய்ந்தவனும், கரிய மேகங்களின் இளங்கொழுந்து ஆகியவற்றின் அழகைக் காட்டும் பேரொளி பிழம்புமான பரம்பொருளை, இம்மை மறுமைக்குரிய செல்வங்களை அடையும் வண்ணம் தனக்குப் புதல்வனாகப் பெற்றெடுத்தாள்.**

*–கம்பராமாயணம், பாலகாண்டம்*







திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- "ஸப்தகிரி" திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- "ஸப்தகிரி" இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- "ஸப்தகிரி" இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- "ஸப்தகிரி" இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- "ஸப்தகிரி" சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- "ஸப்தகிரி" இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

**மேலும் தகவல்களுக்கு :**
**0877- 2264543, 2264359**

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2025

மலர் 04 இதழ் 09






## உள்ளுறை

பக்கம்


ஏழு மரா மரங்களைச் செற்ற இராமன்தான் மலையப்பன் 7
-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

தமிழ் வருடப் பிறப்பு - திரு.சோ.செந்தில் குமார், காஞ்சிபுரம். 10

உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் 14
- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.

திருக்குடந்தையில் தென்னக அயோத்தி 16
- திரு.சதா ஹரிஹரன், கும்பகோணம்.

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: இலங்காபுரியில் இராம தூதனின் திருவிளையாடல்கள்
-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. 20

யுகங்கள் கடந்த ஸ்ரீராமர் - டாக்டர் கி.ஜ.நிகிலாவெங்கட், கோவை. 22

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 24

108 திவ்யதேச வைபவம் : திருநீர்மலை 31
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் 36
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

சித்திரை தந்த நற்பரிசு - திருமதி நளினிசம்பத்குமார், நங்கைநல்லூர். 40

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: இலட்சுமணன் 43
- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

ஆயுர் வேதம்: திராட்சை -திருமதி வி.உஷா, திருப்பதி. 46

ராசிபலன்கள் : ஏப்ரல் 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். 47

நீதிக்கதை: நல்ல நட்பு -திரு.கே.இராமநாதன், சேலம். 48

சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49

சித்திரக்கதை : ஸ்ரீராமரின் நற்குணங்களைப் பெறுவோம் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : சீதா, லஷ்மணர் சமேத பட்டாபி ராம ஸ்வாமி, வாயல்பாடு.


சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எபிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



# இராமநாமமே நம்மை காக்கும் தாரகமந்திரம்

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திரேதா யுகத்தில் தர்மத்தின் வடிவில் ஸ்ரீராம பிரானாகத் தோன்றி அறம் செய்த மக்களையும், தவம் செய்த முனிவர்களையும் அசுரர்களிடமிருந்து காத்தருளினார் என்பது இராமாயணம் கூறும் உண்மை.

வேடர் குலத்தினன் குகன், வானர குலத்தினன் சுக்ரீவன், அரக்கர் குலத்தினன் விபீஷணன் ஆகியவர்களுடன் எவ்வித வேறுபாடுகளும் இன்றி கலந்து பழகிய சௌசீல்ய குணவானான அப்பெருமானின் எளிமையான "ராம" என்னும் இரண்டெழுத்து திருநாமம் நம் அனைவரையும் காக்கும் தாரக மந்திரமாக விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

அனுமனின் சாதனைகளுக்குத் துணை நின்றதும், ஆபத்தின் போது காத்ததும் ராம நாமமே ஆகும். பொதுவாக தெய்வங்களின் உபாசனைக்கான மந்திரங்களை உபதேசம் பெறுவதற்கும், உச்சாடனம் செய்வதற்கும் பல்வேறு விதிமுறைகள் உண்டு. ஆனால், ராம நாமத்தை மட்டும் யாரும் எவ்விதச் சூழ்நிலையிலும் ஓதி நலம் பல பெறலாம் எனப் பெரியோர்கள் கூறுவர்.

வடநாட்டவர்கள் இத்திருநாமத்தை "ராம்" என்று உச்சரிப்பர். இத்திருநாமத்திலுள்ள "ரா" என்ற எழுத்தை உச்சரிக்கையில் நமது உதடுகள் திறப்பதால் நமக்குள் இருக்கும் பாவங்கள் எல்லாம் வெளியேறிவிடும் என்பதுடன், அதைத் தொடர்ந்து "ம்" என்ற எழுத்தை உச்சரிக்கையில் நமது உதடுகள் மூடிக்கொள்வதால் வெளியே சென்ற பாவங்கள் மீண்டும் நமது உடலுக்குள் புகாத வண்ணம் காக்கப்படுகிறோம் என்பதும் வடநாட்டு ராம பக்தர்களின் அசையாத நம்பிக்கையாகும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் தாம் இயற்றிய கம்பராமாயணத்தின் தொடக்கத்தில்...

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே, தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே, இம்மையே ராம என்றிரண்டு எழுத்தினால்"

என்று கூறுவதிலிருந்து, இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் அபாயங்களிலிருந்து மட்டுமல்லாமல், பிறப்பு, இறப்பு என்ற சுழலில் இருந்தும் நம்மைக் காப்பாற்றக் கூடிய வல்லமை ராம நாமத்திற்கு உள்ளது என்பது தெரிகின்றது.

வாலி வதைப் படலத்தில் வரும் கீழ்க்கண்ட கம்பராமாயணப் பாசுரம் இதனை உறுதி செய்கின்றது.

"மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்,
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராம என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்"

இராம பாணத்தால் வீழ்த்தப்பட்டு தரையில் கிடக்கும் பொழுதும் மகாபலசாலியான தன்னை வீழ்த்தக்கூடிய அம்பை எய்தது யார் என்று யோசனை செய்த படியே வலியையும் பொறுத்துக் கொண்டு தனது மார்பைத் துளைத்திருந்த அம்பினை வெளியே எடுத்துப் பார்த்தான் வாலி. பிறவிப்பிணியைத் தீர்க்கும் மருந்தாகிய "ராம" என்ற நாமம் அந்த அம்பில் பொறித்திருப்பதைக் கண்டான் என்கிறார் கம்பர். தனது உயிர் பிரியும் அந்நேரத்தில் முக்தியை அளிக்கக்கூடிய ராம நாமத்தைக் கண்ட வாலிதான் எத்துணை அதிர்ஷ்டசாலி என்று தோன்றுகிறதல்லவா!

ஸ்ரீராமபிரான் "சைத்ர ஸ்ரீமான் அயம் மாஸ:" என்று தமிழ் வருடமான சித்திரைத் திங்களில் இப்புவியில் திருஅவதரித்தருளிய ஸ்ரீராமனின் ஸ்ரீராமநவமித் திருநாளைக் கொண்டாடும் நமக்கு பிறவிப்பிணி உள்ளிட்ட அனைத்து விதமான தீமைகளிலிருந்து நம்மைக் காத்திடவல்ல ராமநாமத்தை மனதார ஓதி அனைத்து விதமான நலன்களையும் பெறுவோமாக!

பகவான் ஸ்ரீமந்நாராயணன், மண்ணுய்ய மண்ணில் மனிதருய்ய அவதாரங்களை எடுத்தான். எண்ணற்ற அவதாரங்கள் என்றாலும் இராம, கிருஷ்ணாவதாரம் பூரண அவதாரங்களாகும்.

இராமன் தான் பகவான். இராமாயணம் தான் வேதம் என்பது பெரியவர்கள் கருத்து. இராமாநுஜர் இராமாயணத்தின் தத்துவங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வருட காலம் திருப்பதியில் எழுந்தருளி பெரிய திருமலை நம்பிகளிடம் சாஸ்திர அர்த்தத்தை எல்லாம் கசடறக் கற்றார். இதை திருவரங்கத்தமுதனார், ***"படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட கோயில் இராமாநுசன்"*** என்று பாடுகின்றார்.

நம்மாழ்வாரும், ***"கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?"*** என்று பாடுகிறார். இதற்கு விளக்கம் என்னவெனில் இராமனிடத்தில் உள்ள குணங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பொருள். இதில் நுட்பமாகக் கவனிக்க வேண்டியது ஆழ்வார் "இராமாயணம் கற்க வேண்டும் என்று சொல்லவில்லை. இராமனைக் கற்க வேண்டும்" என்று பாடுவதைக் கவனிக்க வேண்டும்.

காரணம், நாம் இராமாயணத்தை ஒரு கதையாகப் படித்து விட்டு, கடந்து விடுகிறோம். இராமனின் பல்வேறு குணங்களை நாம் கற்பதில்லை.

"கற்றல்" என்றால் அதன்படி நிற்றல் என்று பொருள். அதனால் இராமாயணத்தை "நடத்தையில் நின்று உயர் நாயகன் கதை" என்று கம்பன் விளக்கினார். இராமரை சாமான்ய தர்மமாக காண்பித்து, சத்யத்தை, விசேஷ தர்மமாகக் காண்பித்தது சரணாகத வாத்சல்யம். இவையே இராமாயணத்தின் சாரம்.

சரி, அந்த இராமன் எங்கே இருக்கின்றான்? என்கிற கேள்வியை திருமழிசை ஆழ்வார் கேட்டு பதில் சொல்கிறார். அந்த இராமனை கலியுகத்தில் காண நீங்கள் வேறு எங்கும் செல்ல வேண்டியது இல்லை. திருமலைக்கு வாருங்கள் என்கிறார். இதோ அந்தப் பாசுரம்...

***கடைந்தபாற்கடல் கிடந்து காலநேமியைக் கடிந்து***
***உடைந்தவாலி தன்பினுக்கு உதவவந்த ராமனாய்***
***மிடைந்த ஏழ்ம ரங்களும டங்கவெய்து வேங்கடம்***
***அடைந்தமால பாதமே யடைந்துநாளுமுய்ம்மினோ***

முதலில் இந்தப் பாசுரத்தின் பொருளை பதம் பதமாகப் பார்ப்போம்.

கடைந்த – கடையப்பட்ட, பாற்கடல் – திருப்பாற் கடலிலே, கிடந்து – கண் வளர்ந்தருளியும், காலநேமியை – காலநேமியென்னுமசுரனை, கடிந்து – ஒழித்தருளியும், உடைந்த – நடுங்கிக் கிடந்த, வாலி தன்பினுக்கு – வாலியின் தம்பியான சுக்ரீவனுக்கு, உதவ – உபகாரம் செய்ய, இராமனாய் வந்து – இராமபிரானாய் வந்து தோன்றி, மிடைந்த –

# ஏழு மரா மரங்களைச் செற்ற இராமன்தான் மலையப்பன்

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963



ஒன்றோடொன்றாகப் பிணைந்து கிடந்த, ஏழ் மரங்களும் – ஸப்த ஸால வ்ருக்ஷங்களையும், அடங்க – ஏழேழாகவுள்ள ஸப்தகுல பாவதாதி களான மற்றவற்றையும், எய்து – பாணத்தாலே துளைபடுத்தி, வேங்கடம் அடைந்த – திருவேங்கட மலையிலே எழுந்தருளியிருப்பவனான, மால – எம்பெருமானுடைய, பாதமே – திருவடிகளையே, நாளும் – நாள் தோறும், அடைந்து – ஆச்ரயித்து, உய்ம்மின் – உஜ்ஜீவியுங்கள்!

பகவான் திருவேங்கட மலைக்கு எழுந்தருளும் முன்னர் பல காரியங் களைச் செய்து இருக்கிறான். பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் தந்திருக்கின்றான். காலநேமி என்கிற அசுரனை வதம் செய்து இருக்கின்றான். பிறகு தேவர்களின் கோரிக்கையை ஏற்று இராமனாக அவதாரம் செய்திருக்கின்றான்.



அந்த இராமாவதாரத்தில், இராவண வதத்திற்கு முன்னு ரையாக வாலியை வதம் செய்து முடித்து விட்டு நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களையும் காப்பாற்றுவதற்காக திருவேங்கட மலையில் எழுந்தருளி இருக்கின்றான்.

நுட்பமாக பாசுரத்தைக் கவனித்தால் வாலியின் வதத்தை இதில் நேரடியாகச் சொல்லவில்லை. ஆனால், அதற்கு முன்னால் நடந்த ஏழு மரங்களைத் துளைத்த சம்பவம் சொல்லப்படுகிறது.

சுக்ரீவன் மனைவி ருமை. சுக்ரீவனின் சொந்த அண்ணனாகிய வாலியால் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டாள். அதோடு கிஷ்கிந்தை யில் சுக்ரீவன் இருப்பதற்கு ஒரு இடம் கூட தராமல் விரட்டியடிக்கப் பட்டான். அண்ணனாகிய வாலிக்குப் பயந்து தம்பி சுக்ரீவன் எதிர் காலச் சிந்தனைகள் இல்லாமல், சொந்த வலிமையும் இல்லாமல், உயிருக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருந்தான்.

இந்தச் சூழலில்தான் இராமலட்சுமண சந்திப்பு நிகழ்கிறது. நிகழ்த்தியவர் சொல்லின் செல்வன் அனுமன். உண்மையைத் தவிர வேறொன்றும் அவன் பேசுவதில் இருக்காது என்கின்ற நம்பிக்கையோடு சுக்ரீவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டு கொதித்துப் போய் வாலியைக் கொன்று அரசாட்சியையும், அவன் மனைவியையும் மீட்டுத் தருவதாக வாக்கு அளிக்கின்றான் இராமபிரான். ஆயினும் சுக்ரீவனுக்கு அச்சம் தீரவில்லை.

வாலியின் வலிமையை முழுவதுமாக உணர்ந்த சுக்ரீவன், மனிதர்கள் போல் தோற்றமளித்து வில்லும் கையுமாக வந்திருக் கும் இவர்களால் உண்மையாகவே தம்மைக் காப்பாற்ற முடியுமா? என்கின்ற அச்சம் மனதில் இழையோடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதை இராமபிரானிடம் நேரடியாகக் கேட்பதற்கு அச்சம்.

பயந்தவன் ஒவ்வொரு விஷயத்திற்கும் பயந்து கொண்டே இருப்பான் என்பதற்கு சுக்ரீவன் ஒரு உதாரணம். வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்கு அரசு ஆட்சியைத் தருவது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் அவன் மனதில் இராமபிரானின் வலிமை யைப் பற்றிய சந்தேகம் நீங்க வேண்டும். அதற்குப் பிறகுதான் அவனுக்கு இவ்விஷயத்தில் நம்பிக்கை பிறக்கும்.

இராமனாகவே ஒரு காரியத்தைச் செய்தாலும் நம்பிக்கை சுக்ரீவனுக்கு வராது. வாலியைக் கொன்று கிஷ்கிந்தையை மீட்டுத் தரும் ஆற்றல் இராமனுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு பரீட்சை வைக்க வேண்டும் என்று நினைக்கிறான் சுக்ரீவன்.

## வேங்கட ராமன்

*தென்னிலங்கை மன்னன் சிரந்தோள்*
*துணிசெய்து*
*மின்னிலங்கு பூண் விபீடணநம்பிக்கு*
*என்னிலங்கு நாமத்தளவு மரச்சென்ற*
*மின்னலங் காரற்கோர் கோல் கொண்டுவா*

**பெரியாழ்வார் பாசுரத்தில் தென்னிலங்கை மன்னனான இராவணனின் தலைகளையும், தோள் களையும் அம்பினால் அறுத்துக் கொன்று அவன் தம்பியான விபீஷணனுக்கு தம்முடைய பெயர் என்றென்றும் விளங்கும்படியாக இலங்கை அரசனாக முடிசூட்டு வித்தவன் திருமலையிலே மின்னலைப் போன்ற திருவாபரணங்களைத் தரித்துக்கொண்டு பக்தர்களுக்குச் சேவை சாதிப்ப தால் திருமலை எம்பெருமான் வேங்கடராமன் என்று போற்றப்படுகிறார்.**

பகவானுடைய ஆற்றலுக்கு தேர்வு வைத்தவன் சுக்ரீவன். அதுதான் அந்த ஏழு மரா மரம் கதை.

சுக்ரீவன் தன் அச்சம் நீங்க வானளவு உயர்ந்த ஏழு மரங்களைக் காட்டி அதிலே ஒரு மரத்தை அடித்தால் போதும் என்று சொல்ல, இராமன் அவனுடைய ஐயப் பாட்டை நீக்க வேண்டும் என்பதற்காக, வில்லில் நாண் ஏற்றி, அம்பு பூட்டி, மரத்தைக் குறிவைத்து எய்கிறான்.

அது ஏழு மரங்களை மட்டும் துளைக்கவில்லை. ஏழு என்று உலகத்தில் எந்தப் பொருள் இருந்தாலும் அத்தனைப் பொருட்களையும் ஒரு பதம் பார்த்தது என்று கம்பன் காட்டுவார். இதோ பாடல்.

*ஏழு வேலையும், உலகம் மேல் உயர்ந்தன ஏழும்*
*ஏழு குன்றமும் இருடிகள் எழுவரும் புரவி*
*ஏழும் மங்கையர் எழுவரும் நடுங்கினர் என்ப*
*'ஏழு பெற்றதோ இக்கணைக்கு இலக்கம்?'*

இப்பொழுது சுக்ரீவனுக்குச் சந்தேகம் நீங்கியது. நிச்சயம் இராமபிரான் தன்னைக் காப்பாற்றி விடுவான் என்கின்ற நம்பிக்கையில் மகிழ்கிறான். "வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என்பது தானே ஆண்டாள் பாசுரம். இங்கே இராமனை நம்பிய சுக்ரீவனின் வருத்தமும் தீர்ந்தது. நம்பிக்கையும் பிறந்தது.

பகவான் தன்னுடைய பக்தர்களுக்காக எதையும் செய்வான் என்பதைக் காட்டுகிறது இந்த நிகழ்வு. திருமழிசை ஆழ்வார் அபயப் பிரதானமான இராமாயணத்தின் இந்த நிகழ்வைச் சொல்லி அந்த இராமபிரான் தான் இவற்றை எல்லாம் முடித்து விட்டு, திருவேங்கட மலையிலே மலையப்ப ஸ்வாமியாக எழுந்தருளி இருக்கிறான். அவனைச் சென்று வேண்டினால் முதலில் உங்கள் அச்சத்தை நீக்குவான். பிறகு அருள் மழையைப் பொழிவான் என்று பாடுகிறார்.

இங்கே ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் எழுதிய உரை அற்புதமானது. (உடைந்த வாலி தந்பினுக்கு) உடைந்த என்ற அடைமொழி வாலிக்கும் ஆகலாம். வாலி தம்பிக்குமாகலாம். உடைதல் – தளர்வு. வாலி, நமக்குப் பகையான ஸுக்ரீவன் நாம் புகவொண்ணாத ரிச்யமுக மலையிலே ஹனுமானைத் துணை கொண்டு வாழா நின்றான். எந்த சமயத்திலே நமக்கு என்ன தீங்கை விளைப்பானோ" என்று உடைந்து கிடப்பவன். ஸுக்ரீவனுடைய உடைதல் சொல்ல வேண்டா என்று நயம் படச் சொல்வார்.







# தமிழ் வருடப் பிறப்பு

**திரு. சோ. செந்தில்குமார்,**
**காஞ்சிபுரம், 93400 91600**

சித்திரை முதல் நாள் தமிழ் வருடப்பிறப்பு. பாரெங்கும் உள்ள தமிழருக்குப் பல விழாக்கள், பண்டிகைகள் இருந்தாலும் தமிழ் வருடப் பிறப்பு அவற்றுள் குறிப்பிடத்தக்க பண்டிகையாகும். இப்பண்டிகை இயற்கையுடன் இயைந்தது, இதன் தொன்மை அறியவியலாதது.

அருந்தவ முனிவன் அகத்தியன் வழிப்படுத்த வளர்ந்தது தமிழ்ச் சமுதாயம் ஆகும். இலக்கணம், இலக்கியம், ஜோதிடம் எனப் பலவற்றிலும் அவர் வழிகாட்டியுள்ளார்.

*புத்தியுள்ள யெனதைய ரசுவினியாந்தேவர்*
*புகலவே யான்கேட்ட வரைபாட்டோடும்*
*கத்தான கலியுகத்து வாழ்க்கை யெல்லாம்*
*காவலரே யாம்கேட்டு நுந்தமக்காய்*
*சத்தியமாய் யானுரைத்தே னன்புளானே*
*மேடமென்னும் ராசியாம் மதனிற்கேளு*
*மேலானா யசுவினி முதலாம் பாதம்*
*குலவியே கதிரவந்தான் வந்துதிக்க*
*வருக புருசன் அவதரிப்பானென்றே*
*பரிவுடன் உலகிற்கு நீசாற்றே.*

–அகத்தியர் பன்னீராயிரம்

இருபத்தேழு நட்சத்திரங்களுள் முதலாவதாகிய அசுவினி தேவர்கள் தமக்கு உபதேசித்ததைப் புலத்திய முனிவருக்குக் கூறுவதாய் அகத்திய முனிவர் கூறுகின்றார். தமிழ் வருடம் பிறக்கும் காலத்தினைத் தெள்ளத் தெளிவாய் உரைத்து உள்ளார்.

மேஷ ராசியில் அசுவினி முதலாம் பாதத்தில் சூரியன் பயணிக்கும் காலத்தில் தமிழ் வருடப் பிறப்பு நிகழ்கின்றது.

*“திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக,*
*விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலம்”*

–என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நெடுநல்வாடை எனும் இலக்கியமும் ஆடு (மேஷம்) ராசியை முதலாவதாகக் கொண்டு சூரியன் விண்ணில் பயணிக்கிறது என்று தெரிவிக்கின்றது.

சூரியன் விண்ணில் பயணிக்கும் காலத்தைப் பன்னிரு ராசி மண்டலங்களாய் நமது முன்னோர் வகுத்துள்ளனர். இவற்றுள் முதலாவது மேஷ ராசி ஆகும். இந்த பன்னிரு ராசிகளையும், சூரியன் கடக்க ஆகும் காலம் ஓராண்டாகும். பருவ மாற்றங்களை அறிந்து கொள்ள சூரியன், ராசி மண்டலங்களில் பயணிப்பதாய் கணிய அறிஞர்கள் வகுத்துள்ளனர்.

வருடத்தின் காலக்கணக்கீடு வருடை எனும் ஆட்டின் பெயரில் தொடங்குவதால் வருடம் என்று வழங்கப்படுகிறது. அதேபோன்று ஆடு என்பதே ஆண்டு என்று வழங்கப்படுகின்றது. திருக்கோயில்

களில் காணப்படும் கல்வெட்டுகள் ஆண்டினைப் பற்றிக் குறிப்பிடும்போது, யாட்டை என்றும் ஆட்டாண்டு என்றும் குறித்துள்ளன.

மக்களின் வாழ்வில் வசந்தத்தை அளிக்கும் காலம் மேஷ மாதமாகும். இது சித்திரை மாதத்தைக் குறிக்கும். இக்காலத்தில் செடி கொடி மரங்கள் எல்லாம் பூத்துக் குலுங்கும். இயற்கை அன்னை இனிய கோலத்தில் விளங்கும் காலம் இதுவாகும். எனவே உயிர்களுக்கும் இயற்கைக் கும் வசந்தத்தை வாரி வழங்கும் சித்திரையில் சூரியன் பயணிக்கும் காலமே தமிழ் வருடப் பிறப்பாகும். இதனைச் சித்திரைத் திருநாள் என்றும் கொண்டாடுவர்.

இத்திருநாளில் அதிகாலை எழுந்து நீராடி வீடுகளில் கோலமிட்டு அலங்கரிக்கின்றனர். மாவிலைத் தோரணங்களும், தென்னங்குருத்து தோரணங்களும் கட்டுகின்றனர். புத்தாடை அணி கின்றனர். வீட்டு முற்றத்தில் பொங்கல் இட்டு சூரிய னுக்குப் படையலிடுகின்றனர். இதற்குச் சித்திரைப் பொங்கல் என்று பெயர். இது தற்காலத்தில் வழக் கொழிந்துள்ளது. அனைவரும் ஆலயங்களுக்குச் சென்று ஆண்டு முழுவதும் இன்னருள் செய்து காத்திடுமாறு இறைவனை வேண்டுகின்றனர்.

இவ்வாறு தமிழர்க் கால மரபு இயற்கையுடன் ஒன்றியதாய் விளங்குகின்றது. இந்தக் காலக்கணக் கீட்டு முறையே உலகில் அனைத்திற்கும் முன்னோடியாகும். தமிழ் வருடப்பிறப்பினை விசுவம் என்றும், விஷு என்றும் தென் தமிழர்கள் வழங்குகின்றனர்.

தென் தமிழகத்திலும், கேரளத்திலும் சித்திரை விஷு கனி தரிசனம் சிறப்புடன் நிகழ்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் குடும்பப் பெரியோர்கள் சித்திரை விசுவிற்கு முந்தைய நாள் இரவில் பூஜையறையில் மாக்கோலமிட்டு ஒரு பெரிய




நூல் ஆசிரியர் : படிமக்கலைஞர் ப.சரவணன்

நூலின் பெயர் : கதை சொல்லும் கற்சிற்பங்கள்

கிடைக்குமிடம் : எண்:40, அகத்தியர் தெரு, காளிமுத்து நகர், அண்ணல் அக்ர ஹாரம் (அ), கும்பகோணம் (வ), தஞ்சாவூர் மாவட்டம் - 612 401.

விலை/செல் : ரூ.160.00, 94431 71383.

அறிவுடைய பிறப்பை அடைந்தவர்கள் தன் ஆன்ம உணர்வினால் சிறிது மேன்மை அடையும்படி செய்து கொண்டே போகும்போது மிகச் சிறந்தவர்க ளாக ஆகின்றனர். அம்முறையில் பிறந்த பிறப்பை சிறப்பாக்கி பொறுப்பை விருப்போடு செய்து தாம் பெற்ற இன்பம் அனைவருக்கும் கிடைக்க கதை சொல்லும் கற்சிற்பங்கள் வாயிலாக தொன்மை போற்றும் படிமக்கலைஞர் சிற்ப ஆய்வாளர் குடந்தை திரு. ப. சரவணன் அவர்கள் பொற்புதையல் கொடுக்க மற்போர் புரிந்து வரும் மகிமைக்கும் மகத்துவத்துக்கும் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.

அரிய சிற்பங்களின் சிறப்பை பலர் அறிய பிரியமுடன் கொடுத்து பெரிய செயல் செய்து நம் ஆன்மா தெளிவு பெற்று பொலிவுடன் திகழ வலிவுடன் தனது கருத்துக்களை இவர் பதித்திருக்கும் பாங்கு உதிக்கும் சூரியனைப் போல் நம் மனதில் ஒளி வீசச் செய்கிறது என்பதை அவர் நூல் வாயிலாகக் காட்டும் சிற்பங்களைப் பார்க்கின்ற போதும், அதற்கான கருத்துக்களைப் படிக்கின்ற போதும் நாம் உணர முடியும்.

எடுத்துக்காட்டாக யாளி வடிவ காலச் சுவடுகள், கணேசினி-சக்தி யோகினி, ஜுரஹரேஸ்வரர், காவிரிக் கரையில் கவிபாடும் கல் நாதஸ்வரம் இப்படி அறிந்திராத செய்திகள் அடுக்கிக் கொண்டே போகலாம்; இவற்றை புரிந்திடும் வகையில் கொடுத்து நம் மனதில் புத்துணர்வைப் பாய்ச்சி புத்தகம் கொடுக்கும் வித்தகம் செய்து பத்தரை மாற்றுத் தங்கமாகப் பரிமளிக்கிறார்.

மாய உலகின் தூய அருள் நிலையை ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஒன்றான சிற்பக் கலையின் அற்புதத்தை கற்பகத்தருவாய்த் தர தேடிச் சென்று வாடி பலருடன் கூடி மாபெரும் தவம் செய்து நம் மனஅவம் நீங்கிட சுபச் செயல் புரியும் சுந்தரராக மந்திரபீடேஸ்வரி ஸ்ரீமங்களாம்பிகை அருள் பெற்று கதை சொல்லும் கற்சிற்பங்கள் மூலமாக சிற்பக்கலைக்கு மணிமகுடத்தை சூட்டியிருக்கும் இம்மாணிக்கம் இறையருள் நமக்கு கொடுத்த காணிக்கை.

- திரு. பால.நவநீத கிருஷ்ணன், குடந்தை.

நிலைக் கண்ணாடி முன்பு மா, பலா, வாழை, கொய்யா உள்ளிட்ட பழவகைகள், வெற்றிலைப் பாக்கு, தேங்காய், கொன்றை மலர்கள், மஞ்சள், அரிசி, சர்க்கரை உள்ளிட்ட மங்கலப் பொருட்கள் வைத்து இராமாயணம் முதலிய ஆன்மீகப் புத்த கங்களையும் வைத்து, வெண்கல உருளிகளில் காசுகள், தங்கம், வெள்ளிப் பொருட்களையும் வைப்பர். மறுநாள் புதுவருடப் பிறப்பன்று அதி காலையில் அனைவரும் கண்களை மூடிக் கொண்டு பூஜையறையை அடைந்து நிலைக்கண் ணாடி முன்பு வைக்கப்பட்டுள்ள கனிகளின் முன்பு கண் விழிப்பர். இதனைக் கனி காணுதல் என்று வழங்குவர். இதன் மூலம் அந்த ஆண்டு முழுவதும் வீட்டில் செல்வம் பெருகி மங்கலமும் மகிழ்ச்சியும் நிறையும் என்பது ஐதீகம்.

கனி காணுதல் நிகழ்ச்சி முடிந்ததும் அனை வரும் குடும்பத்தலைவரிடம் இறைவன் முன்பு வைக்கப்பட்ட காசுகளைப் பெறுவர். மேலும் அன் றைய நாளில் அனைவரது இல்லங்களிலும் வேப் பம்பூ, வெல்லம், மாங்காய் முதலியவற்றைச் சமைத்து அறுசுவை விருந்து நிகழ்வும் நடை பெறும். இவ்வாறு சித்திரை விசு அனைவரது வாழ் விலும் வசந்தத்தைத் தரும் பண்டிகையாகும்.

விஷு என்னும் சொல்லிற்குப் பகலும் இரவும் சமமான நாள் என்பது பொருள். இதனை வடமொழி நிகண்டு அமரகோசம் எனும் நூல், *''விஷூ வஸ்து ஸமராத்ரி வாஸர''* என்று தெரி விக்கின்றது. சித்திரை, ஐப்பசி ஆகிய மாதங் களைச் சம பகலிரவு காலங்களாய் விஷ்ணு புராணம் தெரிவிக்கின்றது.

சித்திரை மாதத்தில் தமிழகத்திற்குச் செங்குத்தாய் சூரியனின் இயக்கம் இருக்கும். இக்காலத்தில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாய் தமிழகத்தின் மீது விழும். இதனை நெடுநல்வாடை எனும் சங்க நூல் வாயிலாய் அறியலாம்.

*''விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்*
*இருகோல் குறிநிலை வழுக்காது*
*குடக்கேர்பு''* – நெடுநல்வாடை

சித்திரை மாத நண்பகலில் இரண்டு கோல் களைச் செங்குத்தாய் நட்டு வைத்து அதன் நிழல் கீழே விழாத நன்னாளில் அரசர்க்குரிய அரண் மனையை அக்கால மக்கள் கட்டத் தொடங்கினர். இதன் மூலம் சித்திரையில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாய் புவியில் விழுவதை அறியலாம். சம பகலிரவு காலங்களாகிய சித்திரை விசுவிலும், ஐப்பசி விசுவிலும் முன்னோர்களுக்குச் சிரார்த்தம் செய்வது உத்தமமாகும். இது மும்மூர்த்திகளும் ஒன்று சேரும் புண்ணிய காலமாகும். சித்திரை விசு திருநாளில் திருக்கோயில்களில் சிறப்பான பூஜைகளும், வழிபாடுக ளும் நடைபெறுகின்றன.

எனவே சூரியனின் பார்வை நேரடியாய் தமிழகத் தின் மீது விழும் இயற்கை திருநாளாகவும், வசந்தத்தை வழங்கி உயிர்களை வாழ்விக்கும் நன்னாளாகவும், தமிழுலகை விளங்கச் செய்யும் பெருநாளாகவும் தமிழ் வருடப்பிறப்பு உள்ளது. நாமும் இந்நாளைப் போற்றிக் கொண்டாடி இறைவனைத்தொழுது நல்லருள் பெற்று உயர்வோமாக!




## புத்தக மதிப்புரை
## திருவிளக்கு பூஜை




நூலாசிரியர் :
திருவாலங்காடு
எஸ். சபாரத்தின குருக்கள்

கிடைக்குமிடம் : முல்லை பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி, அண்ணா
நகர் மேற்கு, சென்னை – 600 040.

விலை/செல் : ரூ.30.00, 98403 58301.

திருவிளக்கு பூஜை என்பது ஓர் உன்னதமான வழிபாடு. திருவிளக்கு வழிபாடு பற்றி ஆசிரியர் இந் நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

திருவிளக்கு பூஜையின் பலன்கள், குத்து விளக்கின் தத்துவம், திருவிளக்கு பூஜைக்குத் தேவை யான பொருட்கள், விளக்கேற்றும் பணி செய்து விமலன் அருள் பெற்ற நாயன்மார்கள், திருவிளக்கு போற்றி 108 போற்றி, திருவிளக்கு குங்கும அர்ச்சனை (லக்ஷ்மி அஷ்டோத்திரம்) 108, திருவிளக்கு அகவல் பாடல், திருவிளக்குத் திருமகள் – பாடல், திருவிளக்கு பஜனை பாடல், ஆரத்தி பாடல் ஆகிய அனைத்தும் அடங்கிய நூல்.

ஒவ்வொரு பெண்கள் கையிலும் இருக்க வேண்டிய நூல்.

**- திரு. பழனி, சென்னை.**

पाठ : चतुस्त्रिंशः

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-34

## अस्मद् शब्दः (நான்) (अहम्)

| | ए | | ब |
|---|---|---|---|
| प्र. | अहम् | - | वयम् |
| द्वि | माम् | - | अस्मान् |
| तृ | मया | - | अस्माभिः |
| च | मह्यम् | - | अस्मस्यम् |
| पं | मत् | - | अस्मत् |
| ष | मम | - | अस्माकम् |
| स | मयि | - | अस्मासु |

## युष्मद् शब्दः (நீங்கள்) (त्वम्)

| ए | | ब |
|---|---|---|
| त्वम् | - | यूयम् |
| त्वाम् | - | युष्मान् |
| त्वया | - | युष्माभिः |
| तुभ्यम् | - | युष्मभ्यम् |
| त्वत् | - | युष्मत् |
| तव | - | युष्माकम् |
| त्वयि | - | युष्मास्सु |

## 'सर्व' शब्दः (समस्तम्)(எல்லாம்)

| | ए | | ब |
|---|---|---|---|
| प्र. | सर्वः | - | सर्वे |
| द्वि | सर्वम् | - | सर्वान् |
| तृ | सर्वेण | - | सर्वैः |
| च | सर्वस्मै | - | सर्वेभ्यः |
| पं | सर्वस्मात् | - | सर्वेभ्यः |
| ष | सर्वस्य | - | सर्वेषाम् |
| स | सर्वस्मिन् | - | सर्वेषु |

## 'एक' शब्दः

द्विवचन, बहु वचनानि न सन्ति

एकः
एकम्
एकेन
एकस्मै
एकस्मात्
एकस्य
एकस्मिन्

## 'कति' शब्दः

एकवचन द्विवचनानि न सन्ति

कति
कति
कतिभिः
कतिभ्यः
कतिभ्यः
कतीनाम्
कतिषु

## 'अनेक' शब्दः

एकवचन द्विवचनानि न सन्ति

| | |
|---|---|
| प्र | अनेके |
| द्वि | अनेकान् |
| तृ | अनेकैः |
| च | अनेकेभ्यः |
| पं | अनेकेभ्यः |
| ष | अनेकेषाम् |
| स | अनेकेषु |

## 'तत्' शब्दः (सः) (அவன்)

| ए | ब |
|---|---|
| सः | ते |
| तम् | तान् |
| तेन | तैः |
| तस्मै | तेभ्यः |
| तस्मात् | तेभ्यः |
| तस्य | तेषाम् |
| तस्मिन् | तेषु |

| ए | | ब |
|---|---|---|
| त्वम् | - | यूयम् |
| त्वाम् | - | युष्मान् |
| त्वया | - | युष्माभिः |
| तुभ्यम् | - | युष्मभ्यम् |
| त्वत् | - | युष्मत् |
| तव | - | युष्माकम् |
| त्वयि | - | युष्मास्तु |

('एषः' इति शब्दः सः शब्दः यः, कः इति शब्दाः सर्वशब्दः वक्तव्यः प्रायशः सर्वनामशब्दाः सर्वे 'सर्व शब्द इव भवन्ति।)


தெலுங்கு மூலம் :
மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,

தொகுப்பு :
திரு.கே. சூர்ய நாராயணா

தமிழாக்கம் :
டாக்டர்
கே.கே.ஏ.ரங்கராஜன்

சென்ற இதழின் தொடர்ச்சி...

நக$_3$த$_4$ராரராரத$_4$நே தவ
வ்ருஷகி$_3$ரீஸ்வர ய இஹ ஸாத$_3$ர
ரசித நாநாநாம கௌ ஸுமதருல
ஸந்நிஜவந விப$_4$ா க$_3$ஜ
ஸுமக்ருதாம் தாம் தாம் சுப$_4$
ஸ்ரஜமுப ஹரந் ஸுகமஹி பதிர் கு$_3$ரு:
அதிரயாயாயாஸதா$_3$ யக ப$_4$வ ப$_4$யா
நக சட$_2$ரிபோ:கில
நிக$_3$மக$_2$ாக$_3$ாக$_3$ா யதா யதி
பரிவ்ருடே$_4$ நது ரசய பூருஷ
ஜிதஸபோ$_4$ போ$_4$போ$_4$கி$_3$ ராங்கி$_3$ரி
பதிபதா$_3$ர்ச்ச நமிதி நியோஜித:
இஹபரம் ரம் ரம்யதேஸ்ம ச
தது$_3$தி$_3$தவ்ரண சுபு$_3$க பூஷணே
இஹரமேமேமேக$_3$ ரோசிஷி
ப$_4$வதி ஹாரிணி ஹ்ருத$_3$ய ரங்க$_3$க

**பதவுரை**

நககர – கோவர்த்தன மலையைத் தாங்கினவனே!, வ்ருஷகிரீ ஈஸ்வர – வேங்கடமலைத் தலைவனே, அஹிபதி குரு: – எந்த அநந்தார்யன், இஹ – வேங்கட மலையில், அதிரய – மிகுந்த தீவிரமான (விரைவான), ஆயாயாஸ – பரந்த (மிகுந்த) களைப்பை, தாயக – உண்டு பண்ணும், பவ – ஸம்ஸாரத்துக்கு, பயாநக – பயங்கரரான, சடரிபோ – சடகோப முனிவருடைய (சடகோபராலே பார்க்கப்பட்ட), நிகமகா – வேதங்களான (திராவிட ப்ரஹ்ம ஸம்ஹிதமென்னும்படித் திருவாய்மொழிக்குச் சேர்ந்த) கா – பாசுரங்களை, காயதா – கானம் செய்யப் படுகின்ற (உரை எழுதப்படுகின்ற) யதி பரிவ்ருதேரதுகில– பகவத் ராமாநுஜராலே அல்லவா, போ: புருஷ – ஓ! தைர்யசாலியான புருஷனே!, ஜிதஸப: – தைர்யம், உறுதி (த்ருட) நிச்சயத்தாலே ஜயித்த விரோத கோஷ்டியை உடையனான (நீ), இஹ – இந்த உலகத்தில் போகிராங்கிரி பதர்ச்சநம் – வேங்கடேச்வரனுடைய (சேஷாசல இறைவனுக்கு) திருவடிக்கு அர்ச்சனை, ரசய – செய்யுங்கள், இதி – என்று, நியோஜித: – கட்டளையிட்டவனாக (ஆணாயோ), ஸ: – அவன், தவ – உன்னுடைய, ஆராதனே – ஆராதனத்தில், இஹ – இந்த விபூதியில் (பூமியில்), ஸாதர – (ஆதரத்தாலே) பக்தியாலே, ரசித – எழுதித் தொடுக்கப்பட்ட, நாநாநாம–பல நாமங்களையுடைய, கௌஸும தருபி: – புஷ்ப மரங்களாலே, லஸத் – பிரகாசிக்கின்ற,

நிஜவந விபாகஜ – சொந்தமான பூந்தோட்ட பாகத்தில் (சம்பக வனம், மல்லிகை வனம், மாலதீவனம், புன்னாக வனம், துளசீ வனம், ஸ்தல பத்ம வனம், கேசவனம் முதலியன) உண்டான, ஸுமக்ரு தாம் – பூவாலே தொடுக்கப்பட்ட, தாம்தாம் – அந்தந்த வார்த்தையால் சொல்ல முடியாத அழகையுடைய, சுபஸ்ரஜம் – மங்களமான மாலைகளை, உபஹரந் – உயர்ந்த பக்தியோடு ஸமர்ப்பிப்பவனாஹி, தத்ருதித – அந்த அநந்தார்யராலே, வ்ரண – (கடப்பாரையினால் உண்டான) காயத் தழும்பை, சுபக பூஷண – மோவாயில், அலங்காரமாகவுடையவனாய், மே – எனக்கு, ரமே – ஈர்ப்பவனாய், மேகரோ



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

சிஷி – மேகத்தை உடைய ஒளி போல் பிரகாசத்தை உடையவனாய், ஹாரிணி – மநோஹரனாக ஆகின்ற (மனத்துக்கினியனாக), பவதி – உன்னிடம், ஹ்ருதய ரங்கக – (என்னுடைய) இதயத்தை இருப்பிடமாக (ரங்கஸ் தலமாக) உடையவனே!, பரம் – மிகுந்த, ரம்ரம்யதேஸ்ம ச – (ப்ரியே ஜநே நாஸ்தி, புநருக்தம் என்கிறபடி) அவ்வப் போது ஆநந்தமடைகிறேன்.

**விரிவுரை :**

"கல்லொன்றெடுத்துக் கல்மாரி காத்தவன்" என்கிறபடி கோவர்த்தன மலையைத் தாங்கினவனே! வ்ருஷாத்ரிக்குப் பிரபுவானவனே! என்று விளித்து மிகுந்த களைப்பை உண்டாக்கும் ஸம்ஸாரத்துக்கு பயங்கரமான ஸ்ரீசடகோபர் (நம்மாழ்வார்) அருளிச் செய்த ஸாமவேத ஸாரமான திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு வியாக்கியானம் செய்தார்.

அப்போது யாதொரு சமயத்தில் எம்பெருமானார், அநந்தாழ்வாரை, "நீ உன்னுடைய தைர்யம், த்ருடத்வம் (உறுதி) நிச்சயத்தோடு சிஷ்யசபையில் எல்லாரையும் மீறி இருக்கிறாய்! நீ வேங்கடேஸ்வர திருவடிக்கு அர்ச்சனை கைங்கர்யத்தைச் செய்" என்று நியமிக்க, அநந்தாழ்வாரும், அன்புடன் திருமலையில் பல புஷ்ப மரங்களோடு சேர்ந்த தோட்டத்தை நிருமித்து, அதில் பூக்களால் தொடுத்த மங்களகரமான வாய்மொழிக் காப்பாற்றபட்டதான (வாசா மகோசரமானன) மாலைகளை உனக்கு ஸமர்ப்பிப்பேன்; என்னால் ஏற்பட்ட புண்ணை பூஷணமாகக் கொண்டவனாய், மேகவொளிக்குச் சமமான ஒளியை உடையவனாய், மனத்துக்கினியனாய் எனக்குக் கணவனான (தலைவனான) உன்னிடத்தில் இந்த அநந்தாழ்வான் கைங்கர்யத்தைச் செய்து மிகுந்த மகிழ்ச்சி அடைவேன் என்கிறார். இச்சுலோகத்தில் மேலே சொல்லப்பட்ட இதிஹாசம் ஸம்ஸ்கிருத வியாக்யானத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் எம்பெருமானார் பெருமை பொருந்திய புத்திமானான அநந்தாழ்வானைப் போன்ற சிஷ்யர்களின் கோஷ்டியை அலங்கரித்துக் கொண்டவராய் ஸ்ரீபராங்குச ஸூரி (நம்மாழ்வார்) அருளிச் செய்த திருவாய்மொழி வியாக்கியான காலக்ஷேபத்தை நடத்திக் கொண்டு இருந்தார். சில நாட்களுக்குப் பிறகு அப்பிரபந்தத்தின் மூன்றாம் பத்து மூன்றாம் பதிகம் காலக்ஷேபம் நடந்து கொண்டிருந்தது.

நம்மாழ்வார் வேங்கடமலையில் திருவேங்கடமுடையானுக்குப் புஷ்ப கைங்கர்யத்தை ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் செய்ய வேண்டுமென்று "ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி" என்று முதல் பாசுரத்திலேயே பாரித்ததை எம்பெருமானார் அப்பாரிப்பை நிறைவேற்ற எண்ணங்கொண்டு தம் சிஷ்யர்கள் மூலமாக அப்பாரிப்பை நடைமுறைப்படுத்த நினைத்தவராய், "உங்களில் யாரேனும் வேங்கடமலைக்குச் சென்று, ஆழ்வார் பாரித்த கைங்கர்யத்தை நிர்வஹிப்பார் உளரோ" என்று கேட்டார்.

*இன்னும் ஜ்வலிக்கும்...*

புனர்வசு நட்சத்திரத்தின் தேவதை அதிதி என்பது மிகப் பெருமை தருவது. அதிதி தேவமாதா, பன்னிரு சூரியர்களுக்குத் தாய். அதனால், இந்நட்சத்திரமும் அவளது சத்தியம், பொலிவு, ஆளுமை, பெருந்தன்மை, தூய்மை போன்ற குணங்களை இயற்கையாகப் பெற்றிருக்கிறது. இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் இயற்கையாகவே இவற்றில் பல நற்குணங்களைப் பெற்றிருப்பர் என நம்பப்படுகிறது.

காலம், இருப்பிடம் முதலியவை இவர்களை கட்டுப்படுத்தாது. கஷ்டம், துயரம் வந்தாலும் நடுங்காமல் அவற்றை எதிர்கொள்வர். இதற்குக் காரணம் அவர்களுக்கு இயற்கையாகவே உள்ள இனிய பேச்சு, நட்புரிமையுடன் பழகும் குணம், ஆன்மீகத் தேடல் முதலியன இவர்களிடம் பழகும் போதே தெரிய வரும்.



"புனர்வஸூவா" நல்ல நட்சத்திரமாச்சே ! குணவானாக நேர்மையுடன், ஆற்றல்கள் பல பெற்றிருப்பான் என்று ஜாதகம் பார்க்கத் தெரியாதவர்கள் கூட கூறுவர். இத்தகைய ஏற்றம் கொண்ட திருநட்சத்திரத்தில் அவதரித்தவரே ஸ்ரீராமர்.


**புனர்வசு நட்சத்திரத்தில் பிறந்த பேரருளாளன்**

# திருக்குடந்தையில் தென்னக அயோத்தி

திருமாலின் தசாவதாரங்களில் ஏழாவது அவதாரம் ஸ்ரீராமாவதாரம். தெய்வம், மானுடராகத் தோன்றி, மானுட வாழ்வியலின் நன்நெறி முறைகளைப் பின்பற்றி, தாய் தந்தை பக்தி மற்றும் சகோதரர் மீது பாசம், போர்க்களத்தில் நிறைவீரம், அறநெறி, நட்பு என அனைத்திற்கும் உதாரணமாகத் திகழ்ந்தது இராமாவதாரம் என்றுச் சொன்னால் அது மிகை ஆகாது.

கோசல நாட்டின் தலைநகரம் அயோத்தியை ஆண்டு வந்த ஆதித்தியக் குலத்தில் பிறந்தவர் தசரத சக்ரவர்த்தி ஆவார். இவருக்கு கௌசல்யா தேவி, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தார்கள். இவருக்கு மக்கட்பேறும் இல்லாத தால் தமது குலகுருவாகிய வசிஷ்ட முனிவரை வணங்கி, குருநாதா அடியேனுக்கு இந்நாள் வரை மக்கட்பேறு வாய்க்கவில்லையே எனக் கூறி மிகவும் வருந்தினார்.

அதனைக் கேட்ட முனிவர் உனது மனக்கவலை விரைவில் மறையும் என நல்லாசி கூறி ஒரு உபயம் நல்கினார். அதனைத் தொடர்ந்து இறைவன் அருளால் கௌசல்யா தேவிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நவமி திதி அன்று ஸ்ரீமகாவிஷ்ணு அம்சமாக ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும், கைகேயிக்கு சக்கரத் தாழ்வார் அம்சமாக பரதனும், சுமித்திரைக்கு ஆதி சேஷன் அம்சமாக லட்சுமணன் மற்றும் சங்கு தேவன் அம்சமாக சத்ருக்கனனும் (இரட்டையர்கள்) ஆகிய நான்கு நன் மக்கள் பிறந்தார்கள். அவர்களோடு இராமாயண இதிகாச காவியமும் தொடங்கியது.



இராமாயணத்தின் நிறைவு பகுதியான பட்டா பிஷேக விழாவில் அன்னை சீதையுடனும் இராம பிரான் கொலுவீற்றிருக்கும் திருக்காட்சியை வட நாட்டிலுள்ள அயோத்தியில் மட்டுமே சிலா வடிவில் காணமுடியும் என்பதால் இக்காட்சியைத் தென்னக மக்களும் காண வேண்டும் என்பது விஜய நகர பேரர சின் சக்ரவர்த்தி கிருஷ்ணதேவராயரின் தம்பியான அச்சுதராயரின் நெடுநாளைய ஆசையாகும்.

அதனைச் செயல்படுத்தும் வண்ணமாக அவரின் ஆளுகைக்குட்பட்ட நாயக்க மன்னரான சேவப்ப நாயக்கர் மகனான அச்சுதப்ப நாயக்கர் மற்றும் பேரன் இரகுநாத நாயக்கர் ஆகிய மாமன்னர் களின் ஆணைப்படி மேற்கண்ட மன்னர்கள் மூவரின் அமைச்சரவையில் முதலமைச்சராக அங்கம் வகித்த ஐயன் கோவிந்த தீட்சிதரால் கும்பகோணம் எனும் இத்தலத்தில் இராமனுக்கு எனத் தனிக்கோயில் எடுக்கப்பட்டது என்பது வரலாறு கூறும் செய்தி ஆகும். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை உலகப் புகழ் பெற்ற மகாமக தீர்த்தவாரி நடைபெறும் மகாமக குளம் அமைந்துள்ள கோயில் மாநகர் என்றழைக்கப்படும் கும்பகோணத்தில் சீதாதேவி தாயார் சமேத இராமஸ்வாமி கொலுவீற்றிருக்கிறார்.

ஏக சிம்மாசனத்தில் சீதையுடன் இராம பிரானும் அருகில் அண்ணனின் கோதண்டத்தை ஏந்தியபடி இலட்சுமணன் எழுந்தருள, பரதன் திருக்குடை

– திரு.சதா ஸ்ரீஹரிஹரன்,
கும்பகோணம்,
94882 41383



பிடிக்க, சத்ருக்கனன் கவரி சாமரம் வீச, அனுமன் ஒரு கரத்தில் இராமாயண ஓலைச் சுவடியும், மற்றொரு கரத்தில் தம்புராவும் ஏந்தி ஸ்ரீராமனின் திருவடியை வணங்கிய வண்ணம் மூல மூர்த்தியாக ஸ்ரீசீதாராமர் பட்டாபிஷேகத் திருக்காட்சியுடன் எழுந்தருளி உள்ளனர். தென்னக அயோத்தி என அழைக்கப் படும் அருள்மிகு இராம ஸ்வாமி திருக்கோயில் திருக்குடந்தை மாநகரின் நடுவில் வடக்கு திசை காணும் வண்ணம் ஐந்து நிலை ராஜ கோபுரத்துடன் தொடர் ஆண்டு 1620 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இத்தல மூலமூர்த்தி பட்டாபிஷேகக் கோலத்தை எடுத்துரைத்துள்ளார் போதேந்திராள் சுவாமிகள். காஞ்சி காமகோடி திருமடத்தின் 59–வது பீடாதிபதியாக 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து இறைவன் திருவடியில் நிறைந்த தனது வாழ்நாளில் ராம நாமாவளியை உயிர் மூச்சாக சுவாசித்தவர். இவர் அருளிச்செய்த ராம கர்ணாமிர்தம்

*வைதேஹி ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹேமே மஹாமண்டபே*
*மத்யே புஷ்பகமாஸநே மணிமயே வீராஸநே ஸுஸ்த்திதம்*
*அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜன ஸுதே தத்வம் முனிப்ய: பரம்*
*வ்க்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராம்ம பஜே ஷ்யாமளம்*

### சிற்பங்கள், சித்திரங்கள்

இக்கோயிலின் மகா மண்டபத்தில் அமையப் பெற்றுள்ள தூண்களில் (தற்காலத்தில் காணப் பெறும் தூண்கள் 62 ஆகும்.) இராமாயண இதிகாச வரலாற்றில் வலம் வந்த கதாபாத்திர சிற்பங்கள், தசாவதார சிற்பங்கள், ரதி, மன்மதன் சிற்பங்கள் போன்ற கலைமிகு சிற்பங்கள் பல உள்ளன. குறிப்பாக இராமன் பட்டாபிஷேகம், விபீஷணன் பட்டாபிஷேகம், சுக்ரீவன் பட்டாபிஷேகம் ஆகியோரின் பட்டாபிஷேகக் காட்சியுடைய மூன்று சிற்பங்கள் உள்ளது. இதுபோல் வேறு எங்கும் காண வாய்ப்பு இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

### பாற்கடல் வாசனாக கோதண்டராமர்

வைணவ திவ்ய தேசங்கள் 108–ல் திருப்புல் லாணி – தர்ப்பைசயன இராமர், திருபுள்ளம்பூதங்குடி – ஸ்ரீவல்வில் இராமர், திருவெள்ளியங்குடி – திருக்கோலவல்லி இராமர் ஆகிய மூன்று திவ்ய தேசங்களிலும் மற்றும் சேலம் அருகிலுள்ள அயோத்திய பட்டிணத்திலும் கிடந்த திருக்கோலத் தில் எழுந்தருளியுள்ள இராமனின் சயனக் கோல வடிவங்கள் போல் இத்தலத்தில் வேறு எங்கும் காணக்கிடைக்காத கோலமாக திருக்கொடிமரம் அருகிலுள்ள ஒரு தூணில் மிக அரிதான வகையில் கந்தர்வர்கள் கானம் இசைக்க பாம்பணையில் துயில் கொள்ளும் பாற்கடல் வாசனாக அம்புறா (அம்புக ளுடன்) மற்றும் கோதண்டத்துடன் சயனத்திருக்கும் கோதண்ட ராமரின் திருவடியைப் பக்த ஆஞ்சநேயர் வணங்கி மகிழும் வண்ணம் கலைமிகு சிற்பம் அமைந்து உள்ளது. இவ்வாலயத்தின் உள் பிரகாரத்தில் பலவித வண்ணங்களால் தீட்டப் பட்டுள்ள சித்திர கூடத்து இராமாயண வரலாற்று

ஓவியங்கள் சுமார் 210க்கும் மேற்பட்டவை உள்ளன என்பது கூடுதல் சிறப்பாகும்.

இக்கோயிலில் உள்ள உற்சவமூர்த்திகள் மிகப் பழங்காலத்தவை என்பதும், அவைகள் தாராசுரத்தில் புதையுண்டு இருந்ததாகவும், அரசர் அச்சுதப்ப நாயக்கர் அச்சிலைகளை எடுத்து வந்து இங்கு பிரதிஷ்டை செய்ததாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.



இத்தலத்தில் பட்டாபிஷேகக் கோலத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீசீதாராமச்சந்திர மூர்த்திக்கு திருமஞ்சனம் செய்து வஸ்திரம் சாற்றி அல்லது செந்தாமரை மலர் மாலை சாற்றி, பசு நெய் தீபம் ஏற்றி துளசியால் அர்ச்சனை செய்து உளமார ராமநாமம் உச்சரித்து வழிபாடுகள் செய்து வர எதிர்பார்த்த உயர் பதவிகள் கிடைக்கும் என்பது திண்ணம். மேலும், திருமணம் போன்ற சுப நிகழ்வுகள் விரைவில் இல்லம் முழுதும் உறையும், குடும்ப ஒற்றுமை பெற்று உள்ளம் மகிழ்ச்சியில் நிறையும் என்பது ஐதீகம்.

இத்தலத்தில் பத்து நாட்கள் நடைபெறும் தேரோட்டத்துடன் கூடிய இராமநவமி விழா, நவராத்திரி விழா மற்றும் பவித்ரோத்ஸ விழா, வஸந்தோத்ஸவ விழா, திருக்கல்யாண உத்ஸவம் என ஆண்டு முழுவதும் பல திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் காலை 6.30 மணி முதல் 12.00 மணி வரை. மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை.




16. "குறையல் பிரானடிக்கீழ் விள்ளாத அன்பன்" என்று புகழப்படும் ஆசார்ய ஸார்வபௌமர் யார்?
பகவத் ராமாநுஜர்.

17. பரகாலன், கலியன், சதுஷ்கவி சிகாமணி, கவிலோக திவாகரர், ஷட்ப்ரபந்த கவி, நாலுகவிப்பெருமாள், மங்கையர்கோன், அருள்மாரி, ஆலிநாடான், மங்கைவேந்தன் என்ற திருநாமங்களை உடைய விலக்ஷண திவ்யசூரி யார்?
திருமங்கையாழ்வார்.

18. திருவாலி திருநகரி திவ்யதேசத்தில் திருமங்கை ஆழ்வாருடைய திவ்யமங்களத் திருமேனி அழகை சேவித்து பரவசமாகி திருமேனி அழகு என்ற சூர்ணிகையை அனுக்ரஹித்த ஆசார்ய குலபதி யார்?
மணவாளமாமுனிகள்.

19. எம்பெருமானார் தர்சன ஜ்யோதிஸ்தம்பம் என்று புகழப்படும் ஆசார்ய ச்ரேஷ்டர் யார்?
பிள்ளைலோகாசார்யர்.

20. யதீந்த்ரப்ரவணப்ரவணர் என்று குலாவப்படும் பூர்வாசார்யர் யார்?
பிள்ளைலோகம் ஜீயர்.

21. யாமுனாசார்யர் யாதவப்ரகாசர் கோஷ்டியில் வேதாத்யயனம் சொல்லிக்கொண்டே நடந்து வந்த இளையபெருமாளை கடாக்ஷித்து என்னவென்று மங்களாசாசனம் செய்தார்?
ஆமுதல்வன் இவன்.

22. பகவத் ராமாநுஜருடைய திவ்யமங்கள திருமேனியில் ஆசார்யர்களைச் சேவித்து அவயவ ப்ரபாவம் என்ற ஸ்தோத்ரத்தை அநுகிரஹித்த வரவரமுனிகள் சீடர் யார்?
பொன்னடிக்கால் ஜீயர்.

**– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

## ஸ்ரீராமர் குறித்த குறுக்கெழுத்துப் புதிர் -105

### இடமிருந்து வலம்

1. ...(10) எனத் தன்னை உணராது இருந்தார் ஸ்ரீராமர்.
2. ஸ்ரீராமருக்கு உதவிய மூன்று ஜீவராசிகள்....(10)
4. இந்திரஜித்திடம் இருந்த ஆயுதம் பிரம்...(5)
9. ஸ்ரீராமரை அயோத்தி மக்கள் ...(2) ராமராகக் காண ஆசைப்பட்டனர்.
12. சீதையின் சுயம்வரத்திற்கு இராமரை அழைத்துச் சென்றவர் ...(8)
13. இராமபக்தர்கள் அயோத்தி நகரை ...(7) என்று கூறுவர்.
14. ஸ்ரீராமர் ...(7) ஏரியைக் காத்தார்.
17. திருமாலின் தோற்றவரிசைகளில் ஸ்ரீராமர்...(3) அவதாரம்.

### வலமிருந்து இடம்


08. ஸ்ரீராமர் தனது திருமேனியோடு மறைந்த ஆறு...(5).
15. ஸ்ரீராமர் இலங்கையிலிருந்து அயோத்தி சென்ற வாகனம்...(8)
18. விபீஷணருக்கு ஸ்ரீராமர் அளித்த குல தானம்....(8)

### மேலிருந்து கீழ்

01. ஸ்ரீராமர் தர்ப்பைப் படுக்கையில் பள்ளி கொண்டு அருளும் திருத்தலம்...(7)
03. அயோத்தி மாநகர் அமைந்துள்ள மாநிலம்...(9)
05. ...(2) குல நாயகன் ஸ்ரீராமர்.
06. தனுசுடன் உள்ள ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி...(4) பாணி
07. ஸ்ரீராமரின் பாதுகையுடன் பரதன் தங்கியிருந்தது...(7)

### கீழிருந்து மேல்

09. ராமபக்தர்கள் எழுதத் தொடங்கும் முதல் மந்திரம் ஸ்ரீ...(5)



தொகுப்பு : திரு.டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807.

புதிருக்கு விடை அறிய 45ம் பக்கம் பார்க்கவும்...

10. சீதா தேவியின் மறுபெயருடன் திகழ்வது...(3) ராமன்.
11. இராமசேனை கடலைக் கடக்க கட்டப்பட்டது சேது...(5).
15. தசரதர் செய்த ...(11) யாகத்தினால் ஸ்ரீராமர் அவதரித்தார்
16. தம்பி மற்றும் சீதையுடன் பத்தாண்டுகளாக ஸ்ரீராமர் தங்கியிருந்தது...(4) வனம்.
18. அகலிகை சாபவிமோசனம் பெற உதவிய பாதம்....(9)

### சபரியின் பக்தி

சபரி என்பவள் ஸ்ரீராமரிடம் அபார பக்தி கொண்டவள். நாள்தோறும் அங்கு இருக்கும் இராமர் விக்கிரகத்திற்கு தன்னிடம் இருக்கும் பழங்களை நைவேத்தியம் செய்து அதை உண்பாள். ஸ்ரீராமருக்கு படைக்கும் அந்தப் பழங்கள் எப்படி உள்ளன என அவள் அதை தின்று பார்த்து படைப்பாள். ஒரு நாள் ஸ்ரீராமரைப் பார்த்த அவள் பழம் இனிப்பாக உள்ளதா? புளிப்பாக உள்ளதா? என்று சோதித்துப் பார்த்தே கொடுத்தாள். ஸ்ரீராமரும் அவளுடைய பக்தியை மெச்சி அவள் அளிக்கும் அப்பழங்களை ஏற்றுக் கொண்டதோடு முக்தியும் கொடுத்தருளினார்.

# இலங்காபுரியில் இராமதூதனின் திருவிளையாடல்கள்

சுந்தர காண்டத்தில் இராமபிரானின் ஆணைப்படி அன்னை சீதாப் பிராட்டியாரைத் தேடி வரும் இராமதூதனான ஸ்ரீஆஞ்சநேயமூர்த்தி இலங்கா புரியில் உள்ள அசோக வனத்தில் மலர்ந்த மலர்களிடையே உதிர்ந்த மலராக வாடிய நிலையில் இருந்த அன்னை சீதாப் பிராட்டியாரைக் கண்டதும் அனுமன் அவரிடம் சென்றான். தான் இராமனின் தூதுவன் என்று தன்னைப் பற்றி எடுத்துரைத்து இராமன் தந்த கணையாழியைத் தந்தான். அதனைக் கண்டு அகம் மகிழ்ந்த அன்னை தனது கூந்தலில் அணிந்திருந்த சூடாமணி இரத்தினத்தைத் தந்து அதனைத் தனது நாயகனிடம் தருமாறு பணித்தாள். அதனைப் பெற்றுக் கொண்டு கிளம்பிய அனுமன் அதற்கு முன் இராம தூதனாக இலங்காபதிக்கு தனது கோபத்தைக் காட்ட முடிவு செய்தான்.

அதனைக் கலகமாகச் செய்ய நினைத்து அசோக வனத்திலுள்ள மரங்களை உடைத்து வீசி எறிந்து சிங்கம் போல் கர்ஜனை செய்தான். அதனைக் கண்ட அப்பகுதியைக் காவல் காத்து வரும் காலதேவர்கள் இராவணனிடம் போய் முறையிட, உடனே அவன் தன் படையில் உள்ள கிங்கரர் என்று பெயர் படைத்த எண்பதினாயிரம் அரக்க வீரர்களை அனுப்பி வைத்தான்.

அனுமன் அவர்களைக் கொன்றுக் குவிக்க, அதனைத் தொடர்ந்து சம்புமாலி எனும் பேரரக்கன் போர்க்களம் வர, அவனும் அனுமனால் கொல்லப்பட்டான். அந்தச் செய்தியைக் காலதேவர்கள் விரைந்து சென்று இராவணனிடம் தெரிவித்தனர்.

இதனைக் கேட்ட இராவணன் தனது படைகளுக்குத் தலைவர்களாய் இருக்கும் விருபாட்சன், யூபாட்சன், துர்த்தரன், ப்ரகஸன், பாஸகர்ணன் எனப் பெயர் கொண்ட பஞ்ச சேனாபதிகள் வசம் அனுமனைப் பிடித்து வர உத்தரவு பிறப்பித்தான். அவர்களையும் அனுமன் வதம் செய்தான். இச்செய்தியை அறிந்து இலங்காபதி இராவணனின் மனத்துயரைப் போக்கும் வண்ணம் அவனின் இளைய மகனான அட்சயக் குமாரன் தான் சென்று அந்த வானரத்தை வதம் செய்து வருகிறேன் என்று தந்தையின் உத்தரவுடன் படைகள் சூழ வனத்திற்கு வந்தான். களத்தில் தனி ஒருவனாக கலகம் விளைவித்து வந்த அனுமனைக் கண்டதும், கண்களில் கோபம் தீயாய் பரவ பலவித ஆயுதங்கள் கொண்டு மிக உக்கிரமாய் அனுமனைத் தாக்க அத்தனை படைகளையும் விரைவில் அழித்தான் அனுமன்.









அசோக வனத்தில் தன்னை பிடிக்க வந்த அசுர வீரர்களை வதம் செய்யும் அனுமனின் சிற்ப வடிவக்காட்சி உள்ள தலம் ஸ்ரீமுஷ்ணம்

நிறைவில் ஆயுதங்கள் இன்றி நின்ற அட்சயக் குமாரன் மற்போர் செய்யக் கருதி தனது கரங்களால் அனுமனை இறுகப் பற்ற அதனைக் கண்ட வாயு மைந்தன் அட்சயக் குமாரன் உடல் நிமிராத வகையில் தன் வாலால் சுற்றி இறுக்கிக் கொண்டு அவனின் பற்கள் உதிரும்படி கன்னத்தில் அறைந்து, குடல் வெளி வரும் வரை தனது கரங்களால் துவைத்து வதம் செய்தான்.

அதனைத் தொடர்ந்து வந்த இராவணனின் மூத்த மகனான இந்திரசித் ஏவிய பிரம்மாஸ்த்திரத்தினால் கட்டுப்பட்டு இலங்காதிபதிக்கு முன் நிறுத்தப்பட்டான் இராமதூதன்.



அனுமன் நரசிம்மமூர்த்தி போல் மாறி இலங்காதிபதியின் இளைய மகனான அட்சயக்குமாரனை வதம் செய்யும் மிக அரிதான காட்சியுடைய சிற்பம் - பேரூர்

அச்சபையில் தன்னை இழிவாக நடத்த முற்பட்டதால் இராவணனுக்கு நிகராக அவனுக்கு முன் வால் கோட்டை அமைத்து இராமதூதனாக உயர்ந்து நின்றான் அனுமன் என்பதும் கம்பராமாயணம் எடுத்துரைக்கும் வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வரலாற்றுச் சுவடுகளை தாங்கிய சிற்பங்கள் பலவற்றை தென்னிந்தியாவில் பல ஆலயங்களில் காணலாம். அவைகளில் மிகவும் அரிதான சிற்பங்களான மேற்கண்ட சிற்பங்களைப் பற்றிய விவரங்கள்.

சிற்பம்(1) : அசோக வனத்தில் தன்னைப் பிடிக்க வந்த அசுர வீரர்களை வதம் செய்யும் விஸ்வரூப அனுமனின் மிக அரிதான சிற்ப வடிவக்காட்சி உள்ள தலம் – ஸ்ரீமுஷ்ணம்.

சிற்பம்(2) : இலங்காபதியின் இளைய மகனான அட்சய குமாரன் வதைப் படலத்தில் ஸ்ரீநரசிம்மமூர்த்தி போல் உக்கிர மூர்த்தியாக எழுந்தருளி தனது வால் படையால் அட்சயக் குமாரனை இறுகப் பற்றி அவனை தனது கரங்களால் (கரப் படைகளால்) வதம் செய்யும் ஸ்ரீஜெயவீர மாருதி பகவானான அனுமனின் சிற்பம் வழியாக வரலாற்றுச் சுவடை தாங்கி நிற்கும் மிக அரிதான வகையில் மேற்கண்ட தூண் சிற்பம் கோவை பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்திலும், இவ்வரலாற்று சுவடுகளை சுமந்த மற்றொரு சிற்பம் கர்நாடகா மாநிலம் பெங்களூர் கலசி பாளையத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சிற்பம்(3) : வால்கோட்டை அமைத்து இலங்காதிபதிக்கு நிகராக அமர்ந்துள்ள அனுமனின் சிற்ப வடிவக் காட்சி.


பின்குறிப்பு: தமிழகத்தில் உள்ள வால் கோட்டை சிற்பங்களில் இச்சிற்பம் தான் மிகப் பெரிது என்பது கூடுதல் சிறப்பு – தலம் கும்பகோணம்.

## 2025, மே மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 02 | இராமாநுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி |
| 06–08 | திருமலையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் |
| 09–12 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் |
| 10 | மதுரகவியாழ்வார் சாத்துமுறை |
| 11 | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, வெங்கமாம்பா ஜெயந்தி |
| 11–19 | ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 12 | ஸ்ரீகூர்ம ஜெயந்தி, அன்னமய்யா ஜெயந்தி |
| 13 | திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா |
| 19–27 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 22 | ஹனுமத் ஜெயந்தி |

# யுகங்கள் கடந்த ஸ்ரீராமர்

டாக்டர்
கி.ஐ.நிகிலாவெங்கட்,
கோவை,
8940991234



**ஸ்ரீராமர் என்றாலே**
**ஒரு இல், ஒரு வில், ஒரு சொல்**

*சம்ஸ்க்ருதத்தில் "ரமயதி" என்ற வினைச் சொல்லுக்கு மகிழ்விக்கிறான் என்று பொருள். "ரமயதி இதி யஸ்ய ஸ: ராம:" – யாரொருவன் (அடுத்தவரை) மகிழ்விக்கிறானோ அவனே "இராமன்" எனப்படுகிறான்.*

"ராம நாமமு ஜன்ம ரக்ஷக மந்த்ரம்" என்ற தியாகராஜ ஸ்வாமியின் சொல்லுக்கேற்ப இந்த கலியுகத்தில் நாம் கடைந்தேர நமக்கெல்லாம் கிடைத்த அற்புத பொக்கிஷம் "ராம நாமம்" ஆகும்.

திரேதாயுகத்தின் நாயகன். தாசரதி. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று தரணிக்கு எடுத்துக்காட்டிய சிறந்த தனயன். நம் கலி யுகத்துத் தவமுனியின் சொல்படி,

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என் நோற்றான்கொல்; எனும் சொல்**

–திருக்குறள் 70

ஸ்ரீராமன் தன் தந்தையின் பெருமையை உலகறியச் செய்தவன், உத்தமன், உன்னத மானவன், தர்மக்ஞன் என்று போற்றும்படி வாழ்ந்தவன். தவமுனிவர் விஸ்வாமித்ரருடன் வனம் சென்று தாடகை வதம் முடிந்து, தம்பி இலக்குவனோடு குருவின் பின் தொடர்ந்து மிதிலையினுள் சென்று, குருவின் கட்டளை ஏற்று சிவதனுசை வளைத்து நாண் ஏற்றியதும், இராஜரிஷி ஜனகர் மாலையோடு காத்திருந்த ஜானகியை இராமனிடத்தில் அழைத்து வந்து ஏற்றுக் கொள்ளும்படி கூறினார். அப்போது தாசரதி ஸ்ரீ ராமன் கூறினாராம் "குரு ஆக்ஞையை ஏற்று வில் வளைத்தேன். மணம் முடிப்பது குறித்து தந்தைதான் முடிவு செய்வார். அவரிடம் கேளுங்கள்" என்று தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை நிரூபணம் செய்துள்ளார்.

ஸ்ரீராமன் ஒரு இல், ஒரு வில், ஒரு சொல் எனும் உயர்ந்த கொள்கையோடு வாழ்ந்தவர். தனது தந்தைக்கு பல மனைவியர் இருந்ததாக ஒரு சொல் இருந்தாலும், தனக்கு ஜானகி மட்டுமே என்று இல்லற தர்மத்தை, இந்த பாரத தேசத்தின் மிகப் பெரிய மாண்பை வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராமர்.

ஸ்ரீராமன் பகைவனை வீழ்த்துவதை விட பகையை மட்டுமே வீழ்த்த எண்ணுபவன் என்பதை நிராயுதபாணியான இராவணனிடம் "இன்று போய் நாளை வா!" என்பதிலிருந்து நம்மால் உணர முடிகிறது. தர்மத்தின் வடிவானவன் ஸ்ரீராமன். ஸ்ரீராமனால் நமக்கு அந்தி நிகழவே நிகழாது. சரணாகதி அடைந்த விபீஷணனை ஏற்கக் கூடாது என்று கூறுகையில் **"அடைந்தவர்க்கு அருளானாயின் அறம் என்ன ஆண்மையென்ன?"** எனக் கேள்வி கேட்டு அனைவரையும் ஜனநாயகப்படுத்தி, இந்த தேசம் அறத்தின் தேசம். அறத்தின் வழி தான் நடக்க வேண்டும் என்றவர். இந்த ஸ்ரீராமனால் சகோதரத்துவம் பாதிப்பு அடையாது. நம் ஸ்ரீராமன் அன்பே வடிவானவன்,

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- குழந்தைகள்/பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- கைக்குழந்தைகளுக்குத் தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பால் தேவைப்படுபவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

*இறைவனின் சேவையில் பக்தர்கள்; பக்தர்களின் சேவையில் தி.தி.தே.*


ஸ்ரீராமனை கொண்டாடுவதற்கும், அவன் புகழுக்கும் ஒரே காரணம் அவன் அரியணை ஏறியதால் அல்ல; அரியணையைத் துறந்ததால் மட்டுமே! தந்தையின் வார்த்தையைத் தனது மந்திரமாகக் கொண்டு உடனே அரச வாழ்வினைத் துறந்து, மரவுறி தரித்து, அயோத்தியா நகரை விடுத்து கானகம் சென்றார்.

ஸ்ரீராமர் தன் இராஜ்ஜியத்தில் அனைவரையும் மதித்தார். அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட்டது. மக்களை ஆட்சி செய்வதில் இராமனைக் காட்டிலும் சிறந்த அரசன் இந்த ஜகத்தினில் காண முடியாது. மக்களை மட்டும் ஆட்சி செய்யவில்லை. அவர்களின் மனதையும் ஆட்சி செய்தான் இராமன்.

ஸ்ரீராம ராஜ்ஜியமே இந்த ஜகத்திற்கு விமோசனம் தரவல்லது. நம் பாரத தேசம் இன்று தனிப்பெரும் சிறப்புடன் விளங்குகிறது. நம் ஸ்ரீராமனுக்கு அயோத்தியா மாநகரிலேயே அற்புதமான ஆலயம் அமைக்கப்பட்டு விட்டது.

கம்பநாட்டாழ்வானின் சொற்சுவையில்

*தோள் கண்டார் தோளே கண்டார் தொடு கழல் கமலம் அன்ன*
*தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே*
*வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?*
*ஊழ் கண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்*

–பால.1169 கம்பராமாயணம்

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி நம் வாழ்விற்கு மட்டும் எடுத்துக் காட்டாய் வாழவில்லை. இந்த நாட்டை எப்படி ஆள (வழிநடத்திட) வேண்டும் என்பதற்கும் எடுத்துக்காட்டாய் இராம ராஜ்ஜியத்தின் வழியாக, தர்மத்தின் வழி நடந்து ஆட்சி செய்து காட்டினார்.

## புதிய ஆத்திசூடி 4

### ஈகை திறன்



"காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று சொன்ன பாரதிதான் "எத்தித்திருடுமந்தக் காக்கை அதற்கு இரக்கப்பட வேணுமடி பாப்பா" என்று குழந்தைகளுக்குச் சொல்வது போல் பெரியவர்களுக்கும், ஈகை பற்றி அழகாக எடுத்துக் கூறுகிறார்.

சின்னக் குழந்தைகளிடம் முதலில் இருந்தே அன்பு, அகிம்சை, இரக்கம் இவை எல்லாம் கற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டு, பாப்பா பாடலில் விளக்கிய பாரதிதான் அதை எளிமைப் படுத்தி தனது புதிய ஆத்திசூடியில் "ஈகை திறன்" என்று எளிமையாகப் புரிய வைக்கிறார்.

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்" என்று அழுத்திக் கூறி, அன்பு இருக்கும் இடத்தில் தான் உதவும் குணம் ஈகை குணம் இருக்கும் எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

குழந்தைகளே நாமும் இறை பக்தியோடு எல்லோரிடத்திலும் அன்புடனும் இரக்கம், ஈதலுடன் விளங்கிடுவோம்


**டாக்டர் கவிஞர்**
**இரா. உமா பாரதி, சென்னை,**
**மகாகவி பாரதியார் வம்சாவளி**



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

எங்களுக்கு மோட்சம் அடைவதற்கான வழியைக் காட்டுங்கள். அதுபோதும். அதுவே நாங்கள் உம்மிடம் வேண்டும் வரம் என்றனர் முனிவர்கள்.

எம்பெருமானும் முனிவர்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து “முனிவர்களே! நீங்கள் பரிபூர்ணத்துவம் பெற்றவர்கள். பரம சாந்த குணம் உடையவர்கள். எனவே பொது வாக அனைவரும் கேட்கும் வரங்களை நீங்கள் கேட்கவில்லை. நீங்கள் விரும்பியவாறே மோட்சத்தை அளிக்கின்றேன்” என்றார்.

பிறகு “முனிவர்களே! பிரம்மதேவர் புரட்டாசி மாதத்தில் எனக்கு மிகப் பெரிய அளவில் உற்சவங்கள் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து உள்ளார். நான்முகனாரின் எண்ணம் நிறைவேறும் பொருட்டு நான் பூலோக வாசிகளை என்னிடத்தில் வரும்படி செய்கிறேன். மனம் நிறைய பக்தி பாவனை யைச் சுமந்து கொண்டு மலையேறி வருகின்ற பக்தர்களின் கோரிக்கைகளை நான் தீர்த்து வைக்கிறேன். என் லீலை களைக் கேட்டு பக்தியோடு வணங்குபவருக்கு வரங் களைப் பிரசாதிக்கின்றேன். அப்படிப்பட்டவர்கள் என் அருகில் இருந்தாலும் அல்லது தொலை தூரம் இருந்தா லும் தவறாமல் அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றி வைப்பேன். அவர்களுடைய துன்ப காலத்தில் துணையாக இருந்து, அவர்கள் உள்ளத்தில் நம்பிக் கையை வளர்த்துக் காப்பாற்றுவேன். மேலும், இறப்பிற்குப் பிறகும் அவர்களுக்கு நல்ல புண்ணிய கதியை உண்டாக்கிக் கொடுப்பேன்.

ஸ்ரீஹரியின் திருவாக்குகளைக் கேட்ட முனிவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். சேஷாத்திரி மலை யிலேயே தொடர்ந்து 5 ஆண்டுகள் இருந்தனர். 5 வருடங்க ளுக்குப் பிறகு “முனிவர்களே! நீங்கள் இங்கேயே தங்கி இருப்பது எதற்கு? உங்களுடைய ஆசிரமங்களுக்குச் செல்லுங்கள்” என்று ஸ்வாமி அனுமதி தந்தார்.

ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி சமேதமாக இருந்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியை முனிவர்கள் வணங்கினர். ஸ்வாமி சந்நிதியை விட்டு புறப்பட்டுச் செல்வதற்கு மனமில்லாமல், ஸ்வாமியின் திருமுகத்தைக் கண் குளிர பார்த்துப் பார்த்து, ஆனந்த கண்ணீர் உதிர்த்தவாறு ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து செல்ல எத்தணித்து, பிறகும் திரும்பி ஸ்வாமியைப் பார்த்து தன்மயமாகி அங்கிருந்து அவர்களால் புறப்பட முடியாமல் தவிப் பதைக் கண்டு ஸ்வாமியும் முனிவர்களிடம், “மிகச் சிறந்த தவச்சீலர்களே நான் நிர்குண பிரம்மம். ஆயினும், சாமான்ய மக்களைக் காப்பதற்கு மிகவும் விருப்பமும் ஆர்வமும் உள்ளவனாக இருக்கிறேன். எனவே, இங்கேயே இருப்பவனாகவும் இருப்பேன். எங்கும் நிறைந்தவனாகவும் இருப்பேன். எனவே விவேகிக்கு என்னுடன் பிரிவு என்பதே இல்லை. என்னுடைய குற்றமற்ற வடிவத்தை நினைத்திருப்பவர்க்கு எப்பொழுதும் அருகிலேயே இருப்பவனாவேன். நீங்களும் அது போன்ற எண்ணத்துடன் எப்பொழுதும் இருந்து வருவீர்களாக” என்றார்

# ஸ்ரீராமனின் பெருமை



*அயோத்திக்குப் பெருமை சேர்க்கும் அண்ணல் ஸ்ரீராமா*
*அரண்மனையில் நவமி புனர்வசுவில் அவதரித்த ஸ்ரீராமா*

*மன்னன் தசரதன் தவப்புதல்வனான ஸ்ரீராமா*
*வில்லொடித்து சீதையைக் கரம்பிடித்த ஸ்ரீராமா*

*பட்டாபிராமா பரந்தாமா புன்னகை பூத்த ஸ்ரீராமா*
*ஜானகிராமா சங்கடம் தீர்க்கும் நம் ஸ்ரீராமா*

*ஜயஜயராமா சக்ரவர்த்தி திருமகன் ஸ்ரீராமா*
*கோதண்டம் ஏந்திய ரகுகுலதிலகம் ஸ்ரீராமா*

*அனுமன் துதித்த அவதார வீரராகவனே ஸ்ரீராமா*
*அரக்கன் இராவணனை அழித்த எங்கள் ஸ்ரீராமா*

*ஒரு சொல் ஒரு வில் ஒரு இல் என இருந்திட்ட ஸ்ரீராமா*
*தந்தை வாக்கை தரணியில் காத்த ஸ்ரீராமா*

*அரசும் ஆரண்யமும் ஒன்றாகப் போற்றிய ஸ்ரீராமா*
*வில் அம்பு சங்கு சக்கரம் ஏந்தும் சதுர்புஜனே ஸ்ரீராமா*

*வில்வித்தை கலைகள் அனைத்தையும் கற்ற ஸ்ரீராமா*
*அகலிகை சாபம் நீக்கியருளிய அற்புதனே ஸ்ரீராமா*

*ஜடாயுக்கு மோட்சம் தந்த விஜயராகவனே ஸ்ரீராமா*
*மகன்கள் லவகுசர்களின் கானத்தை ரசித்த ஸ்ரீராமா*

*கண்டேன் சீதையைச் சொல் கேட்டு களித்த ஸ்ரீராமா*
*பூரண அவதாரமே மனிதனாகத் தோன்றிய ஸ்ரீராமா*

*கண்ணனின் கீதையின் தர்மத்தில் வாழ்ந்த ஸ்ரீராமா*
*கோயில்களில் அர்ச்சிக்கப்படும் அர்ச்சை வடிவே ஸ்ரீராமா*

*லட்சுமணன் பரதசத்ருக்னனின் அண்ணன் ஸ்ரீராமா*
*குகன் சுக்ரீவன்விபீடணன் சகோதரனுமானவனே*
*ஸ்ரீராமா.*



**திரு. ஏ. ஜே. ரங்கராஜன்,**
**ஆதம்பாக்கம், 944 510 5470**

இப்பொழுது புண்ணியத் திருத்தலமான நைமிசாரண்யத்திற்குப் புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அனுமதி கூறி ஸ்வாமி மௌன நிலைக்குச் சென்று அர்ச்சை வடிவமானார். தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சிலை வடிவம் தாங்கிய ஸ்வாமியின் அழகைக் கண்டு முனிவர்கள் வியப்பில் ஆழ்ந்த வண்ணம் புகழ் மாலைப் பாடினர்.

ஸ்வாமியை மீண்டும் மீண்டும் வணங்கியபடி வேங்கடாத்திரியை விட்டு கீழே இறங்கி கபில தீர்த்தம் வழியாக கிரிவலம் செய்து, பின்பு நைமிசாரண்யம் வந்தடைந்தனர். நைமிசாரண்யம் சென்றடைந்த முனிவர்கள் நேராக சூத மகரிஷியிடம் சென்று, “ஸ்வாமி! உங்கள் புராணக்கதை கேட்டு வேங்கடாத்திரியைத் தரிசிப்பதற்கு உங்கள்

அனுமதியோடு வேங்கடாத்திரிக்குச் சென்றோம். நீங்கள், எங்களுக்கு விளக்கிக் கூறிய அவ்விடங்கள் அனைத்தையும் ஆசை தீரக் கண்டு களித்தோம். நாங்கள் அங்குச் செல்வதற்குக் காரணமாக அமைந்தது தாங்கள் செய்த பிரசங்கமே ஆகும். அந்த அமுத வாக்கியங்களே நாங்கள் திருமலைச் செல்வதற்குத் தூண்டு கோலாக அமைந்தது. தாங்கள் எவ்வாறெல்லாம் விளக்கி விவரித்துக் கூறினீர்களோ அதேபோல் அங்கு இருந்ததைக் கண்டு வியந்தோம்.

நாங்கள் கண்ட அந்த மலை பொன்மயமாக இருந்தது. அங்கு காடுகள் சைத்திய ரதம் போன்று இருந்தன. அனைத்து மிருகங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து காடுகளில் திரிவதைப் பார்க்க முடிந்தது. ஸ்வாமி புஷ்கரணி புண்ணிய நீரால் முழுவதும் நிரம்பி இருந்தது. புஷ்கரணியின் மேற்கு திசையில் பூவராஹ ஸ்வாமி அருள் சாதிக் கின்றார். அத்திருக்கோயிலுக்குத் தெற்கு திசையில் பொன் மயமான கலசங்கள் கொண்ட கோபுரங்களும், மண்டபங்களும் உள்ளன. அதற்கு இடையில் ஒளிமயமான விமானத்தைப் பார்த்தோம். அந்த விமா னத்தில் உள்ள ஸ்ரீலக்ஷ்மி காந்தனைத் தரிசித்தோம். அந்நிலையில் நாங்கள் எங்களையே மறந்து போனோம். அதன் பிறகு ஸ்வாமியை வணங்கினோம். ஸ்வாமி ஒளிவு மறைவு இல்லாமல் எங்களுடன் உரையாடினார்.

ஸ்வாமியின் மதுரமான வார்த்தைகளைக் கேட்டு மெய்மறந்து இருக்க, ஸ்வாமி, “முனிவர்களே! நீங்கள் நைமிசாரண்யத்திற்குச் செல்லுங்கள் என்று அனுமதி தந்தார்.

**தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.**
**தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.**

*பெருமை அறிவோம்...*

## வாழ்வியல் நெறிகள்

### அணையா விளக்கு!



*தவியாதிரு நெஞ்சமே! தில்லை மேவிய சங்கரனைப்*
*புவியார்ந்திருக்கின்ற ஞானாகரனைப் புராந்தகனை*
*அவியாவிளக்கைப் பொன்னம்பலத்தடியை ஐந்தெழுத்தால்*
*செவியாமல் நீ செபித்தால் பிறவா முக்தி சித்திக்குமே!*

– பட்டினத்தார்

பொருள் : மனமே! ஏங்கி, இளையாதிரு! தில்லைச் சிவபெருமானை, உலகெங்கும் நிறைந்திருக்கும் ஞானாகரனை, முப்புரங்கள் எரித்தவனை, என்றும் அணையாத விளக்கை, கனக சபையில் ஆடும் பெருமானைப் பஞ்சாட்சரமாகிய நமச்சிவாய மந்திரத்தால் செபித்தால் பிறவா பேரின்ப வீடு கை கூடும்.


**வாழ்வியலுக்கான கருத்து** : பஞ்சாட்சர மந்திரமாகிய “நமசிவாய” மந்திரத்தைக் கருவி, கரணங்கள் கடந்து சமாதி நிட்டையில், குரு மூலமாக அனுபவநிலை தெளிந்து செபித்தால் பிறவாத முத்தி சித்திக்கும்.

*“இல்லக விளக்கது இருள் கெடுப்பது சொல்லக விளக்கது சோதி யுள்ளது*
*பல்லக விளக்கது பலரும் காண்பது நல்லக விளக்கது நமச்சிவாயவே”*

என்பது அப்பர் தேவாரம். எல்லா ஒளிகளுக்கும் ஒளியளிக்கும் பேரொளி சிவமே. ஆதலால் அதனை “அணையாவிளக்கு” என்றார். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்பதும், “ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடா தாரே” என்பதும் நாம் அறிய வேண்டிய அருமை அல்லவா? “எல்லாம் இறைவன் செயல்” என்று வாழ்க்கையை நன்றென்று வாழ்தல் வேண்டும்.

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

# மகாகும்பமேளா-2025



மாசி மாதத்தில் நடத்தப்படும் மகா கும்பமேளா உலகிலேயே நடைபெறுகின்ற மிகப் பெரிய ஆன்மீகச் சங்கமமாகும். இம்மேளாவில்தான் நாக சாதுக்களும், சாதுக்களும் பெருமளவில் பங்கு பெறுவர். அவர்கள் முகாம்களை அமைத்து வீதிவலமாக வருகைத் தருவது ஒரு பெரிய திருவிழாவைக் காண்பது போன்று இருக்கும். சிறு கிராமங்களில் இருந்தும், பெரிய நகரங்களில் இருந்தும் சிறியோர் பெரியோர் என எவ்வித பாகுபாடுமின்றி கலந்து கொள்ளும் பண்டிகையாகும்.


12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கிரக பெயர்ச்சிகளுக்கு ஏற்றபடி நதிகளில் நடைபெறும் புஷ்கரமே கும்பமேளாவாகும். சாதாரணமாக கும்பமேளா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், பகுதியளவு (அரை) கும்பமேளா 6 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், பூர்ண கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பிரயாக்ராஜ், ஹரித்வார், உஜ்ஜயினி, நாசிக் போன்ற இடங்களில் நடைபெறும். 12 பூர்ண கும்பமேளாவிற்குப் பிறகு அதாவது 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை அலகாபாத்தில் பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமமான கங்கை, யமுனை, கண்ணுக்குப் புலப்படாத சரஸ்வதி நதிகள் கலக்குமிடத்தில் நடைபெறும். தேவர்கள் தங்களின் சக்தியை அதிகரிக்க அமிர்தம் வேண்டி பாற்கடலைக் கடைந்த போது வெளிவந்த அமிர்தம் பெறுவதற்கு அசுரர்கள், தேவர்களிடையே போர் நடந்த போது மஹாவிஷ்ணு அந்த அமிர்த கலசத்தை எடுத்து செல்கையில், அதிலிருந்து அமிர்தம் சிந்தியது. ஹரித்துவார், உஜ்ஜயினி, நாசிக், பிரயாக்ராஜ் நதிகளில் விழுந்தது. அன்றிலிருந்து கும்பமேளா இங்கு பெரும் திருவிழாவாகக் கொண்டாடப்படுவதாக புராணங்கள் கூறுகின்றன.

சூரியன், பிரகஸ்பதி சிம்ம ராசியில் இருந்தால் நாசிக்கிலும், சூரியன் மேஷ ராசியில் இருந்தால் ஹரித்துவாரிலும், சூரியன் மகர ராசியில் இருந்தால் பிரயாக்ராஜ்ஜிலும், பிரகஸ்பதி, சூரியன் விருச்சிக ராசியில் இருந்தால் உஜ்ஜயினியிலும் கும்பமேளா நடைபெறும்.

பிரயாக்ராஜில் 13–01–2025 (பௌர்ணமி) ஆம் தேதி துவங்கி, பிப்ரவரி 26 (மகாசிவராத்திரி) அன்று நிறைவுற்ற மகாகும்பமேளாவில் உலகம் முழுவதிலிருந்தும் சுமார் அறுபது கோடி பக்தர்கள் வரை வந்திருந்து புனித நீராடினர். இச்சமயத்தில் பித்ரு தேவதைகளுக்கு தர்ப்பணம் சமர்ப்பித்தால் அவர்கள் புண்ணிய லோகம் செல்வர் என்றும் நம்பிக்கை உண்டு.

மகாகும்பமேளாவில் இந்த 45 நாட்களும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பிரயாக்ராஜ்ஜில் ஒரு மாதிரி ஆலயத்தை நிர்மாணித்து பக்தர்களுக்கு ஸ்வாமி தரிசன பாக்கியத்தை அளித்து. அதோடு நித்ய அர்ச்சனைகள், கல்யாண உத்ஸவமும் நடத்தியது. இவ்வுத்ஸவங்கள் தி.தி.தே. எஸ்.வி.பி.சி. பக்தி சேனலிலும் ஒளி பரப்பு செய்யப்பட்டன. மகாகும்பமேளாவிற்கு வருகை தந்த பக்தர்களுக்கு கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தரிசனம் தந்து அருள்பாலித்தார்.

08-01-2025 அன்று உத்திர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஜனவரி, பிப்ரவரி மாதம் நடைபெற்ற மகாகும்பமேளாவை முன்னிட்டு ஸ்ரீவாரி கல்யாண ரதத்தை திருமலையிலிருந்து கொடியசைத்து அனுப்பி வைத்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி. ஆர்.நாயுடு அவர்கள் உடன் தி.தே.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சிஎச். வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ்.அவர்கள்.
12-01-2025 அன்று உத்திர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகாகும்பமேளாவை முன்னிட்டு அமைக்கப்பட்ட தி.தி.தே. மாதிரி ஆலயத்தை பக்தர்களின் தரிசனத்திற்காகத் திறக்க ஆகம சாஸ்திரப்படி நடைபெற்ற சிறப்பு பூஜை திருக்காட்சிகள்































உத்திர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகாகும்பமேளாவை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த தி.தி.தே. மாதிரி ஆலயத்தில் 03-02-2025 அன்று வசந்த பஞ்சமியை முன்னிட்டு ஸ்வாமி சரஸ்வதி தேவி அலங்காரத்தில் எழுந்தருளிய திருக்காட்சி. 16-01-2025 அன்று ஸ்வாமிக்கு நடைபெற்ற ஸ்நபன திருமஞ்சனத் திருக்காட்சிகள்



உத்திர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகாகும்பமேளாவை முன் னிட்டு அமைக்கப்பட்டிருந்த தி.தி.தே. மாதிரி ஆலயத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நடைபெற்ற திருக்கல்யாண உத்ஸவத் திருக்காட்சிகள்





# திருநீர்மலை

- உருப்பட்டூர் செளந்தரராஜன்,
சென்னை.

108 திவ்வியதேச வைபவம் 93

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட புராணம் கூறுகிறது : காச்யபர், அத்ரி முனிவர், பரத்வாஜர், விசுவாமித்ரர், கௌதமர், ஜமதக்னி, வசிஷ்டர் முதலிய மாமுனிவர்கள், புனிதத் தலங்களில் மிகவும் உயர்ந்த தலம் எது? என்று சூத புராணிகரைக் கேட்டபோது, அவரால் இத்திவ்ய தேசம் தான் உயர்ந்த தலமாகக் கூறப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இம்மலையைத் தோயாத்ரி, தோதாத்ரி, தோதசைலம், தோயாசலம் என்று பல பெயர்கள் சொன்னாலும், ஆழ்வார் திருவாக்கில் வந்துள்ள திருப்பெயர் திருநீர்மலை. பிருகு முனிவரும், மார்க்கண்டேயரும் பல திருத்தலங் களை வழிபட்ட பின்பு, இங்கு வந்து சேவித்தனர். இங்கே, பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த எம்பெருமான், அவ்விடத்தை விட்டு வந்து, தன் விருப்பத்தின் காரணமாக இந்த இடத்தில் அரங்க நாதனாகச் சேவை தருகிறான். இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதி, காண்டவ வனம் என்ற பெயரில் அமைந்துள்ளது. இக்காட்டில் உள்ள கொடிய விலங்குகள் கூட, தமது பகை உணர்வு நீங்கி, ஒற்றுமையுடன் உள்ளதாம்.

பாற்கடலே, இங்கே க்ஷீரபுஷ்கரணி என்ற பெயரில் புஷ்கரணி. இதன் நடுவில் தோயாத்ரி மலை, அம்மலையின் சிகரத்தில் ரங்கவிமான நிழலில், ஆதிசேடனாகிய படுக்கையில், அரங்க நகர்ச் செல்வனாகப் பள்ளி கொண்டு உள்ளான். பிருகு முனிவர் எம்பெருமானிடம் வேண்டிய வரத்திற்கு ஏற்ப, சித்திரை மாதப் பௌர்ணமியில், இப்பெருமானை வழிபடுபவர் விரும்பிய விருப்பங் களை எல்லாம் எம்பெருமான் நிறைவேற்றுகிறார்.

மார்க்கண்டேயர், பிரமன், நாரதர், அர்ச்சுனன், சோழ மன்னன், கரிகாலனின் மைந்தனாகிய திரையன் என்ற தொண்டைமான் முதலியோர் இப் பெருமாளை வழிபட்டு அருள் பெற்றவராவர்.

இது பகவான் இங்கு கிடந்த வரலாறு. இப் பெருமானின் அருளைப் பெற்ற பிருகு, மார்க்கண்டேயர் என்ற இருவரின் திருவுருவங்க ளும், சந்நிதியில் விளங்குகின்றன. நீர் வண்ணப் பெருமான் திருக்கோயிலில் சேவை சாதிக்கிறார். மலையில் ரங்கநாயகித் தாயார் தனிக்கோயில் நாச்சியாராக விளங்குகிறார்.

இரண்டாவதாக அமர்ந்த நிலையில்(உட்கார்ந்த நிலையில்) நரசிங்க மூர்த்தியாக, சாந்த மூர்த்தியாக பகவான் சேவை சாதிக்கிறார். நரசிம்மனின் கோபத்துக்குப் பயந்து பிரகலாதன் ஓடி தென் கிழக்குத் திசையில் இங்கு வந்து மலையில் அமர்ந்து, சிங்கபிரான் வாழும் அஹோபிலம் இருக் கும் திசையையே பார்த்துக்கொண்டு, அப் பெருமானையே நினைத்துக் கொண்டு தவம் செய்து



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*த்வரந்நஸம்ஸேவ்ய ஸ ரங்க$_3$நாத$_2$மாக$_3$ம்ய*
*காஞ்சீம் வரத$_3$ம் ப்ரணம்ய ।*
*தீர்த்த$_2$ாதி$_3$கைங்கர்யகர: கத$_3$ாசித் கிம்*
*வாத்ய கர்தவ்யமிதீவ த$_3$த்$_4$யௌ ॥*

(38)

**(அதற்குப்பின் ஆளவந்தாரை உயிரோடு சேவிக்காத மனக்குறையாலே) அரங்கநகரப்பனைச் சேவிக்காமலே காஞ்சிக்குத் திரும்பிய இராமாநுஜர், வரதராஜனை வணங்கி, அவனுக்குச் சாலைக்கிணற்றுநீரை அளித்தல் முதலான கைங்கர்யங்களைச் செய்கின்றவராய், ஒரு சமயம் "நாம் இனிச் செய்ய வேண்டியது என்ன" என்று சிந்தித்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

வர தேவர்கள் சிங்கப்பிரானின் சீற்றத்தைத் தணிக்கும் பொருட்டுத் திருமகளைப் பெருமானிடம் அனுப்ப பிராட்டியின் கடாக்ஷம் பட்டவுடன் பகவானிடம் சீற்றம் மறைந்தது. சாந்தம் தவழ்ந்தது.

பிரகலாதன் வேண்டியபடி, இவ்விடத்தில் இதே வடிவில் நிலையாய் எழுந்தருளி அருள்பாலிக்கிறான். நரசிம்மனின் கருணைப் பார்வை இத்தலத்தில் வீழ்ந்து தேங்கிய இடம் காருண்ய புஷ்கரணி என்ற பெயரில் திருக்குளம் ஆயிற்று. பிரகலாதனின் ஆனந்தக் கண்ணீரும் இவ்வாறு ஆகியது என்பர்.

மூன்றாவதாக "நடந்த கோல" வரலாறு: மகாபலிச் சக்கரவர்த்தியிடம் வாமனனாய்ச் சென்ற எம்பெருமான் மூவடி வேண்டிப்பெற்று, ஓரடியால் மண்ணுலகையும், மற்றோர் அடியால் விண்ணையும் அளக்க, அளப்பதற்கு மேல் நோக்கி எழுந்த திருவடியைப் பிரமன், கங்கை நீரால் திருமஞ்சனம் செய்ய, அந்த நீரைத் தாங்கும் பேறு, சிவபிரானுக்குக் கிடைக்க, நீரைத் தாங்கிய சிவபெருமான், அந்தநீர் பெருகிய இடமான எம்பெருமானின் திருவடிகளைக் கண்டு திருவடியே இப்படி இருக்குமா னால், திருமுடி வரை உள்ள எம்பெருமானின் பெரு வடிவம் (விஸ்வ ரூப வடிவம்) எப்படி இருக்கும்? என்று சிந்தித்து அதனைக் காணும் ஆர்வத்தில் அத்தகைய எம்பெருமானைக் காணும் பொருட்டு, கயிலாயத்தை விட்டுப் புறப்பட்டு, மண்ணுலகில் பல தலங்களையும் அடைந்து, நிறைவாகக் காண்டவ வனத்தில் உள்ள இத்தலத்துக்கு வந்து அம்மலையிலேயே கடுந்தவம் செய்து பகவான் சேவை சாதிக்க, இங்கே இதே கோலத்தில் அர்ச்சையில் அருள்பாலிக்கும்படி வேண்ட, பகவான் அதே நிலையில் விளங்குகிறார். சிவபிரான், எம்பெருமானின் திருவடியை விளக்கிய போது, அந்த நீர் தேங்கிய இடம் சித்த புஷ்கரணி என்ற திருப்பெயரில் புனிதத் தீர்த்தமாக மாறிற்று.

### நான்காவதாக நின்ற கோலத்து வரலாறு

வான்மீகி மகரிஷி இராமனின் முடிசூட்டு விழாவிற்குப் பின் இராமனை விட்டுச் சீதை நிலை யாகப் பிரிந்த செய்தியை அறிந்த துயரத்தோடு மிக வருந்தி காண்டவ வனத்தை அடைந்து, தோதாத்ரி மலையின் அருகில் இருந்த ஹரித மலையில் தவம் செய்தும் வருத்தம் போகவில்லை.

அப்போது ஓர் அசரீரி "தோயாத்ரி மலையில் அரங்கனையும், சிங்கப் பிரானையும், உலகு அளந்தவனையும் சேவித்து, இராமனை, மலை அடிவாரத்தில் தியானம் செய்தபோது, மலை உச்சியில் இருந்த அரங்கநாதன், ஸ்ரீராமனாகவும், திருமகள் சீதையாகவும், ஆதிசேடன் இலக்குவனாகவும், கருடன் அனுமனாகவும், ரங்க விமானம் புஷ்பக விமானமாகவும் காட்சி அளிக்க, இராமன் வான்மீகியைப் புஷ்பக விமானத்தில் ஏறச் சொல்ல, வால்மீகி விமானத்தில் அமர்ந்து வரம் கேட்க, இரண்டு பொற்றாமரை மலர்கள், புனிதத் தீர்த்தத்தில் வீழ்ந்தன. அதில் ஒரு மலர் மொட்டாக மாறியது. அதனை விரஜை என்ற புனிதநீர் திருமஞ்சனம் செய்தது. அதில் எம்பெருமான், நீர் வண்ணப் பெருமானாகச் சேவை சாதித்தார். பிறகு இதே வடிவில் மலையடிவாரத்தில் எழுந்தருளி அர்ச்சையில் அருளப் பிரார்த்திக்க, புஷ்பக விமானத்தில் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதித்தான். பிறகு இதே வடிவில் மலையடிவாரத்தில் எழுந்தருளி அர்ச்சையில்

அருளப் பிரார்த்திக்க புஷ்பக விமானத்தில் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதித்தான்.

**சிறப்புகள் :**

நின்ற திருக்கோலத்தைத் திருநறையூரிலும், இருந்த திருக்கோலத்தைத் திருவாலியிலும், கிடந்த திருக்கோலத்தைத் திருக்குடந்தையிலும், நடந்த திருக்கோலத்தைத் திருக்கோவலூரிலும் கண்டு சேவித்து மகிழ்ந்த திருமங்கையாழ்வார் அவை அனைத்தையும் திருநீர்மலை என்ற ஒரே திவ்ய தேசத்தில் சேவித்தார். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் பகவான் அர்ச்சாவதாரத்தில் சேவை சாதிக்கும் திவ்ய தேசம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | நீர்வண்ணன், நீலமுகில் வண்ணன், நின்றான் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) (இராமருக்குத் தனிச்சன்னதி) |
| பெருமாள் | : | 1) சாந்த நரசிம்மன் (இருந்தான்) (கிழக்கு நோக்கிய அமர்ந்தத் திருக்கோலம்)<br>2) திரிவிக்கிரமன் (நடந்தான்) (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்)<br>3) ரங்கநாதன் (கிடந்தான்) (தெற்கு நோக்கிய கிடந்த திருக்கோலம்) (மாணிக்க சயனம்) |
| தாயார் | : | அணி மாமலர்மங்கைத் தாயார் (தனிக்கோயில் நாச்சியார்) மலை மேல் அமைந்த திருக் கோயில்.<br>ரங்க நாயகி, (கிழக்கு நோக்கிய திருக்கோலம்) தனிக்கோயில் உள்ளது. |
| 4ம்6ம்தீர்த்தம் | : | மணிகர்ணிகா தடாகம், க்ஷீர புஷ்கரணி, காருண்ய புஷ் கரணி, சித்த புஷ்கரணி, சுவர்ண புஷ்கரணி. |
| விமானம் | : | தோயகிரி விமானம் (நீராத்ரி விமானம்) |
| தலவிருட்சம் | : | வெப்பாலை என்ற மரம். |
| ப்ரத்யக்ஷம் | : | தொண்டைமான், பிருகு முனிவர், மார்க்கண்டேயர், வால்மீகி முனிவர். |
| ஆகமம் | : | வைகானசம். |
| மங்களாசாஸனம் | : | பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம்**

புராணம் சொல்கிறது: திவ்ய தேசங்களில் ஆங்காங்கே பல அடியார்களின் வேண்டுகோளின் காரணமாகவும், ரிஷிகளின் தவத்தாலும், பகவான் அந்தந்த இடங்களில் ஆவிர்ப்பவிப்பது உண்டு.

## ஸப்தகிரி பிப்ரவரி 2025 விடைகள்

1. பாஞ்சஜன்யம்.
2. தொண்டரடிப்பொடி ஆழ்வார்.
3. ஜடாயு.
4. இரத சப்தமி.
5. இராமபிரான்.
6. இராமாநுஜர்.
7. கன்னியாகுமாரி.
8. சூரியன்.
9. புனிதவதி.
10. பீஷ்மர்.
11. பெரிய நம்பிகள்.
12. விஜயகோடி விமானம்.
13. கோவிந்தா, கோபாலா.
14. சித்திரை, திருவாதிரை.
15. ஸ்ரீகிருஷ்ண பகவான்.



## போட்டி எண். 31

வினாடி வினா

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் அதிதி ராகவன்,
கிழக்கு சவுரி பாளையம் ரோடு,
கோவை மாவட்டம்.
2. செல்வி வி.பா. விபாஷா,
மாணிக்கம் பாளையம் ரோடு,
ஈரோடு மாவட்டம்.
3. செல்வன் ச. தேவமுருகா,
ராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

எம்பெருமான் தானே விரும்பி சில தலங்களில் எழுந்தருளியிருப்பது ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரங்கள் (தானாகத் தோன்றிய திருப்பதிகள்) திருவரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்கிராமம், நைமிசாரண்யம், புஷ்கரம், திருவதரி, திருநீர் மலை என்று எட்டு. ஆகவே ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரங்களில் இத்திவ்ய தேசமும் ஒன்று.

**த்யானச்லோகம் :**

*ஸ்ரீமாந் நீரத ராதரேந்த்ர சிகரே திஷ்டர்*
*புரஸ்தாந் முக:*
*தீரே ஸ்ரீமணி கர்ணி காக்ய ஸரஸோ கச்சந்*
*ஸ்வபந் ஸர்வதா*
*தேவ:பங்கஜ வாஸிநீப்ரிய ஸகோ நீராத்ரிவைமாநிக:*
*தத்தேசாதிப சக்ரவர்த்தி வரதோ தத்யாத்*
*ஸுவித்யாம்சமே*

*பயின்றது அரங்கம், திருக்கோட்டி பன்னாள்*
*பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் - பயின்றது*
*அணி திகழும் சோலை அணி நீர்மலையே*
*மணி திகழும் வண் தடக்கை மால்*

– பூதத்தாழ்வார்

*பேசும் அளவு அன்று இது வம்மின் நமர் பிறர்*
*கேட்பதன் முன் பணிவார் வினைகள்*
*நாசம் அது செய்திடும் ஆதன்மையால் அதுவே*
*நமது உய்விடம் நாள்மலர் மேல்*
*வாசம் அணி வண்டு அறை பைம்புறவில் மனம்*
*ஐந்தொடு நைந்து உழல்வார் மதிஇல்*
*நீசரவர் சென்று அடையாதவனுக்கு இடம்*
*மாமலையாவது நீர்மலையே*

– திருமங்கையாழ்வார்

*இரங்கும் உயிர் அனைத்தும் இன்னருளால்*
*காப்பான்*
*அரங்கன் ஒருவனுமே ஆதல் - கரங்களால்*
*போர்மலை வான் வந்த புகழ் வாணன் காட்டினான்*
*நீர் மலை வாழ் எந்தை எதிர் நின்று*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்


## தற்பொழுது விற்பனையில் தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. ஸ்ரீவிசுவாவசு வருட (2025-2026) பஞ்சாங்கம் தற்பொழுது விற்பனைக்கு வந்துள்ளது. இந்தப் பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் தற்பொழுது உங்கள் முன்...

**மேலும் விவரங்களுக்கு :**

**சிறப்பு அலுவலர்,**
**தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம்,**
**தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை,**
**திருப்பதி-517 507. தொ.எண்.0877-2264209**


**நாமாக்கள்**

*881. ஓம் ஜ்யோதி: நம:*

அர்ச்சிராதி மார்க்கத்தில் தானே முதல் ஒளியாக இருப்பவன்.

*ஓம் ப்ராப்தி: நம:*

வேதம் முதலான ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கப் படுபவள்.

*882. ஓம் ஸுருசி: நம:*

இரண்டாவதான பகலாக இருப்பவன்.

*ஓம் வாஸந்திகா: நம:*

பூஜிக்க, வஸந்த காலத்திலும் தோன்றுபவள்.

*883. ஓம் ஹிதபுக்விபு: நம:*

மூன்றாவதான வளர்பிறை சந்திரனாக இருப்பவன்.

*ஓம் ஆலேகா: நம:*

அதற்காகச் சித்ரத்தில் வரையப்படுபவள்.

*884. ஓம் ரவி: நம:*

நான்காவதான உத்தராயணமாக இருப்பவன்.

*ஓம் பூரபிஜா நம:*

ஸம்ஸார சேதநர்களை ஸம்ஸார ச்ருஷ்டிக்கு விதைகளாக உடையவள்.

*885. ஓம் விரோசந: நம:*

ஐந்தாவதான உத்தராயண தக்ஷிணாய காலங்களில் சூரிய ஒளியான வருஷமாக இருப்பவன்.

*ஓம் மஹாகதா: நம:*

உயர்ந்த சொற்களைச் சொல்பவள்.

**886. ஓம் ஸூர்ய: நம:**

ஆறாவதான வாயு லோகமாக இருப்பவன்.

**ஓம் அமோகா: நம:**

வீணாகாத முயற்சிகளை உடையவள்.

**887. ஓம் ஸவிதா: நம:**

ஏழாவதான மழை, பயிர் இவற்றை உண்டாக்குபவன்.

**ஓம் சாந்திதா: நம:**

ஆத்மானந்த அநுபவத்தைத் தருபவள்.

**888. ஓம் ரவிலோசந: நம:**

எட்டு, ஒன்பது, பத்தாவதான சந்திரன், மின்னல், வருணன் இவர்களை சூரியன் மூலமாக விளங்கச் செய்பவன்.

**ஓம் ஸ்துத்யா: நம:**

மகிழ்ச்சியுடன் புகழத்தக்க மஹா குணங்களை உடையவள்.

**889. ஓம் அநந்தஹுதபுத்போக்தா: நம:**

11,12வதாக இந்திரனையும், பிரமனையும் வைத்து இருப்பவன்.

**ஓம் ஜ்ஞாநதா: நம:**

தியானஜ்ஞானம், தத்வஜ்ஞாநம், ப்ரஹ்மாது பவம் போன்ற ஞானங்களைத் தருபவன்.

**890. ஓம் ஸுகத: நம:**

13வதாக, அமானவன் மூலமாக சம்சாரமகற்றி, தன் சுகத்தை அளிப்பவன்.

**ஓம் உத்கர்ஷிணீ நம:**

ஸம்ஸாரத்திலிருந்து ஜீவாத்மாக்களை உயர ஏற்றி விடுபவள்.

*1) ஶ்ரீமதே ஸுந்தரவல்லீ (அணிமாமலர் மங்கை) நாயிகா ஸமேத ஶ்ரீஜலதி வர்ணாய (நீர்வண்ணப் பெருமாள்) பர ப்ரம்மணே நம:*

*2) ஶ்ரீமதே ரங்க நாயிகா ஸமேத ஶ்ரீரங்கநாத பர ப்ரம்மணே நம:*

*3) ஶ்ரீமதே ஸீதாதேவீ ஸமேத ஶ்ரீராமசந்த்ர பர ப்ரம்மணே நம:*

*4) ஶ்ரீத்ரிவிக்ரம பர ப்ரம்மணே நம:*

*5) ஶ்ரீஸாந்த நரஸிம்ஹ பரப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

கண்டராண்ய க்ஷேத்ரம் சென்னை – பல்லாவரத்தில் இருந்து சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் மலை மீது இந்தத் திவ்யதேசம் அமைந்து உள்ளது.

*தொடர்ந்து தரிசிப்போம்...*



## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்



# இராமாநுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி
வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

சென்ற இதழின் தொடர்ச்சி...

(பண்டை மறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே) பண்டை மறை – அநாதியான வேதம். அநாதியாவது முன் முன் உச்சாரணத்தைக் குறித்து மேல் மேல் உச்சாரணமாகையாலே புருஷ புத்தி அதீனத்தால் வரும் தோஷங்கள் ஒன்றுமில்லாததான வேதம் என்றபடி. அந்த வேதத்தை, நன்கு உணர்ந்து ஆராய்ந்து ப்ரஹ்மஸூத்ரத்துக்கு பாஷ்யம் செய்தார். இதில் பல வேத, வேதாந்த வாக்யங்களை விளக்கியுள்ளார்.

இராமாநுசர் வடநாட்டில் சாரதா பீடத்துக்கு எழுந்தருளினபோது ஸரஸ்வதியும் எதிரே புறப்பட்டு வந்தாள். இவர் ஸ்ரீபகவானுடைய அம்சாவதாரம் என்று மிகவும் ப்ரபீதியுடையவளாய், ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ'' (சா.உ.1–6–6) என்கிற வேதாந்த வாக்யத்துக்கு இராமாநுசரை அர்த்தம் கேட்க, அவரும் "ஸ்ரீமந்நாராயணனுடைய திருக்கண்கள் அப்போது அலர்ந்த செந்தாமரைப் பூப்போல இருக்கும்'' என்று அருளிச் செய்தார். ஸரஸ்வதியும் கேட்டு ஸந்தோஷித்து, என் சிந்தாவ்யதையைப் போக்கின ஸ்ரீமான் அன்றோ என்று மிகவும் ஆதரித்தாள். இராமாநுசர் அருளிய ஸ்ரீபாஷ்யம் முதலான ப்ரபந்தங்களை தலையால் வணங்கி இவருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்று திருநாமம் சூட்டினாள். இது பற்றியே மறையைத் தெரிந்த பாடியத்தோன் என்றபடி.

(பரகாலன் அடி இணையைப் பரவுமவன் வாழியே) திருமங்கை ஆழ்வாருக்குப் பரகாலன் என்பது சிறப்பு பெயர். பரகாலன் – எதிரிட்ட பகைவர்களைத் தலை எடுக்கவொட்டாமல் அமுங்கும்படி செய்பவர். பகைவர்கள் வந்து அணுகாதபடி சிம்மம் போன்ற அநபிபவநீயராவர். ஆயுத வித்யைகளில் தேர்ச்சி பெற்று சோழ ராஜாவிடம் சேனாபதியாய் அமர்ந்து பல போர்களில் வெற்றி பெற்று பரகாலன் – எதிரிகளுக்கு யமன் போன்றவர் என்ற புகழ் பெற்றவர்.

ஆசார்யரான பட்டர் அருளிய ஒரு தனியனில் பரகால என்பதற்குச் சேர எம்பெருமானுக்குப் பகைவர்களான வேதத்தை மறுப்பவர்களைத் தோள்வலிமையால் அழித்தவர். அதற்கு மேலே சாஸ்த்ரம் மூலமாக வளர்ப்பவர்களாய் வந்த பகைவர்களை தன் சொல்லாலும், ஆயுதத்தாலும் அழித்து திருவரங்க நகரில் மணிமண்டபங்களைக் கட்டின கைங்கர்யங்களையும், வாசிக கைங்கர்யங்களையும் செய்து வந்தவராகையாலே பரகாலனானார். ''குறையல் பிரானடிக்கீழ் விள்ளாத

அன்பன் இராமாநுசன்'' என்று அமுதனார் அருளியபடியே திருக்குறையலூரில் அவதரித்த திருமங்கை ஆழ்வாரோ திவ்ய ப்ரபந்தம் அருளியதாலும், திருவத்யயன உற்சவத்துக்கு ஏகாதசியில் திருநாள் நடப்பித்த படியாலும், அங்கு பெருமாளுக்கு அரணாக திருமதிலை நிர்மாணித்த படியாலும், ருத்ர பக்ஷபாதிகளான குத்ருஷ்டிகளோடு தர்க்கித்து அவர்களை ஜயித்து அவர்களாலே பழிக்கப்பட்ட திவ்ய தேசங்களை நிர்வகித்தபடியாலும், இப்படிப்பட்ட தன்மைகளாலே உதவி செய்தவரான திருமங்கை ஆழ்வாருடைய திருவடிகளின் கீழே என்றும் விட்டு நீங்காது இருப்பவர் இராமாநுசர் என்று உரைப்பர். இவ்வாழ்வாரோ ப்ரதம பர்வமான எம்பெருமானை அநுபவிப்பதில் ஊற்றமுடையவர்.

இராமாநுசரோ சரம பர்வமான பாகவதரிடம் ஊற்றமுடையவர். ஆகையாலே இவ்வாழ்வாரின் திருவடிகளின் கீழ் ஒருக்காலும் விடாதே உறுதியான – நீங்காத பக்தியை உடையவர்.

## ஸ்ரீபட்டாபிராமர் ஆலயம், வாயல்பாடு

ஆந்திர மாநிலம், அன்னமய்யா மாவட்டத்தில் உள்ள வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமர் ஆலயம் ராம பக்தனான ஜாம்பவனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமைக்குரியது. இந்த ஆலயத்தில் பட்டாபிஷேகக் கோலத்தில், ஸ்ரீராமபிரான், சீதா, லட்சுமணர், பரதர், சத்ருக்னர், அனுமனோடு ஒரே பீடத்தில் எழுந்தருளியிருப்பதால் இது ராம பஞ்சாயதன (ஐந்து பேர்களும்) ஆலயமாகக் கருதப்படுகிறது. இங்கு கருவறையில் ஸ்ரீராமபிரான் கோதண்டமின்றி, இடக்கரத்தில் கட்கம் என்ற குறுவாள் ஏந்தி காட்சியளிப்பது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும். இங்கு சீதா தேவியின் திருநட்சத்திரமான ஆயில்யத்தன்று திருக்கல்யாணம் நடைபெறுவதும் ஒரு சிறப்பாகும். பாஞ்சராத்ர ஆகம முறைப்படி தினப்பூஜைகள், உற்சவங்கள், சைத்ர மாதம் ஸ்ரீராம நவமிக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தொடங்கி பிரம்மோத்ஸவமும் நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தின் ஆறாவது நாள் திருக்கல்யாணம் முடிந்து ஸ்ரீபட்டாபி சீதாராமர் கருட வாகனத்தில் திருவீதி உலா வர, ஏழாவது நாள் திருத்தேர் உற்சவமும் நடைபெறுகிறது.

இந்த வருடம் பிரம்மோத்ஸவம் ஏப்ரல் மாதம் 3ஆம் தேதி துவங்கி, 11ஆம் தேதி துவஜாவரோஹணத்துடன் முடிவடைகிறது. 7ஆம் தேதி இரவு கருட சேவையும், 8ஆம் தேதி திருக்கல்யாணோத்ஸவமும் நடைபெறுகிறது. பக்தர்கள் இந்த பிரம்மோத்ஸவச் சேவைகளில் பங்கு கொண்டு இறை அருள் பெறவும்.



இதனை மெய்ப்பிக்கும் வகையில் இராமாநுசர் திருவாலி திருநகரிக்குச் சென்று ஆழ்வார் ஸந்நிதியில் எழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து, ஆழ்வார் திருவடியைக் காணும்போது வடிவ அழகையும் கண்டு – “***அணைத்த வேலும், தொழுத கையும், அழுந்திய திருநாமமும், ஓம் என்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும், பரந்த விழியும், இருண்ட குழலும், சுருண்ட வளையமும், வடிந்த காலும், அலர்ந்த காதுகாப்பும், தாழ்ந்த செவியும், சரிந்த கழுத்தும், அகன்ற மார்பும், திரண்ட தோளும், நெளிந்த முதுகும், குவிந்த இடையும், அல்லிக்கயிறும், அழுந்திய சீராவும், தூக்கிய கருங்கோவையும், தொங்கலும், தனி மாலையும், சாத்தின திருத்தண்டையும், சதிரான வீரக்கழலும், குந்தியிட்ட கணைக்காலும், குளிர வைத்த திருவடிமலரும்*** நினைத்துக் கொண்டு நின்றாராம். அப்போது ஆழ்வாரும் கருணை பண்ணி இவருக்கு தீர்த்த ப்ரஸாதம் மற்றும் திருவடி நிலைகளையும் சென்னிக்கு அணியாக்கினார். இதுபற்றியே அடி இணையைப் பரவுமவன் என்றபடி.

(தண்டமிழ்நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே) தண் தமிழ் நூலாவது – எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், ஐஸ்வர்யம் ஆகியவற்றைத் தெரிவிப்பதான கௌரவத்தாலே தன்னை கற்கிறவர்களுடைய எல்லா தாபங்களும் ஆறும்படி சிரமத்தைப் போக்குவதான தமிழ் ப்ரபந்தமான திருவாய்மொழி என்றபடி. மேலும், தண்தமிழ் நூலான திருவாய்

# திருமலையில் வஸந்தோத்ஸவம்



வஸந்த உற்சவத்தில் திருமஞ்சனமாட்டும் சேவையைச் சேவிக்கிறோம். அந்தத் திருமஞ்சனத் தீர்த்தப் பிரசாதத்தின் புனிதத்தன்மை நம்மால் உணரப்பட வேண்டும். பகவானுடைய திருவடிகளில் மந்திரத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது எதுவோ அது பாத்யம் என்று சொல்லப்படுகிறது. அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு பக்தியினால் பகவானைத் தியானம் செய்து தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொள்கின்றானோ அவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறான். மண்ணில் எத்தனை புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றனவோ, அவை எல்லாவற்றிலும் ஸ்நானம் செய்வதால் என்ன பயன் உண்டாகின்றதோ அத்தனைப் பயன்களையும் பகவானுடைய பாத்ய தீர்த்தத்தைத் தரிப்பதனால் அடையலாம்.



ப்ராயச்சித்தம் செய்வதற்கு பகவானுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை அருந்தி உடனேயே சுத்தி அடையலாம். எவருடைய மனதில் பகவானுடைய ரூபமும், வாயில் அவன் திருநாமமும், வயிற்றில் எம்பெருமானுக்குக் கண்டருளப் பண்ணின உணவும், தலையில் பகவானுடைய ஸ்ரீபாததீர்த்தமும், அவனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட புஷ்பம் முதலியவை இருக்கின்றதோ அவரே உண்மையான வைஷ்ணவர். நதி தீர்த்தங்கள் வெகு காலம் கழித்துப் பாபத்தை நீக்குவன. ஆனால் பகவானுடைய ஸ்ரீபாத தீர்த்தம் அப்பொழுதே பரிசுத்தம் செய்கிறது.



சாப்பிடும் சமயம், போஜனம் முடிவதற்கு முன்னால் அகஸ்மாத்தாக ஒரு இனிய உணவு கிடைத்தால், பரிமாறுபவர்களிடம் சொல்லி “முதலில் பகவானுக்கு நிவேதனம் செய்த பின்னர் எனக்கு சாதியுங்கள்” என்று சொல்லிப் நாம் சாப்பிட வேண்டும்.

எவன் விஷ்ணுவினுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை எடுத்து, புண்ணிய தீர்த்தங்களைப் பத்தியுடன் பகவானைத் தியானம் செய்து தன் தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொள்கிறானோ அவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறான்.



பகவானுடைய திருமஞ்சன தீர்த்தத்தையும், ஸ்ரீபாததீர்த்தத்தையும் சாப்பிட்ட பிறகு தலையில் ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். அதனால் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாய் விஷ்ணுவின் சுத்தியைப் போன்ற சுத்தியை அடைவான்.



இந்த வஸந்தோத்ஸவத்தில் பங்கு கொண்டு, அங்கே அளிக்கப்படும் தீர்த்தத்தினை உட்கொண்டு நாம் நம் பாவங்களிலிருந்து விடுபடுவோம்.

மொழியானது முதல், நடுவு, முடிவு ஆகியவற்றில் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையும், அறிவில் பொருள், அறிவுள் பொருள் ஆகியவற்றின் ஸ்வபாவங்களையும், சேதனருடைய உலக உறவுக்குக் காரணத்தையும், உலகுக்குக் காரண வஸ்து நாராயணனே என்றும் பலபடியாகக் கூறுகையாலே சிறந்து விளங்குவதாகும்.

அப்படிப்பட்ட நம்மாழ்வாரை சரணானான் என்பதற்குச் சேர இராமாநுசர் யாத்ரையாக திருக்குருகூருக்குச் சென்று ஆழ்வாரை மங்களாசாசனம் செய்தார். ஆழ்வாரும் *''கலியும் கெடும் கண்டுகொண்மின்''* என்று பவிஷ்யத் விஷயமாகச் சொன்ன இராமாநுசரைக் காணப் பெற்றோமே என்று மிகவும் உகந்து கருணை புரிய, அவ்வளவில் இவரும் ஆழ்வாருடைய அப்ரமேயமான வைபவத்திலே ஆழங்கால்பட்டு ஆழ்வார் திருவடிகளுக்குப் பாதுகைபோலே இட்ட வழக்காய் பொருந்து நின்றார்.

உடனே இன்று தொடங்கி ஆழ்வார் திருவடி நிலைகளுக்கு என்றும் இராமாநுசன் என்னும் திருநாமமாக வேணும் என்று வேண்ட, அன்று முதல் ஆழ்வார் திருவடிகளுக்கு மதுரகவிகள் என்று அழைக்குமது நீங்கி இராமாநுசன் என்று ஆயிற்று. இது பற்றியே ஆழ்வார் சரணானான் வாழியே என்றவாறு.

(தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே) தாரணி – பூமி.

விண்ணுலகம் – பரமபதம் – திருவரங்கத்து எம்பெருமானான நம்பெருமாள் ஸங்கல்பத்தின் பேரில் திருவரங்கப்பெருமாள் அரையர் என்னும் ஆசார்யர் காஞ்சீபுரம் வந்து பேரருளாளனான வரதராஜனிடம் இராமாநுசரைத் திருவரங்கத்துக்கு அனுப்ப வேண்டி, பெருமாளை இசையால் இசைவித்து இராமாநுசரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு திருவரங்கம் வந்து சேர்ந்தார். கோயிலில் பெரிய பலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்து, ஸேவா க்ரமத்திலே ஆழ்வார்களையும் திருவடி தொழுது, ஸ்ரீரங்கநாயகி தாயாரையும் ஸேவித்து, அணி அரங்கன் திருக்கோயிலிலே சென்று தண்டன் ஸமர்ப்பித்து, உள்ளே புகுந்தார். பிரணவாகார விமானத்தையும் ஸேவித்தார்.

அழகிய மணவாளன் திருமண்டபத்திலே எழுந்தருளின அளவிலே, நம்பெருமாளும் திருக்கைத்தலத்திலே கர்ப்பக்ருஹத்திலிருந்து புறப்பட்டு எதிரே எழுந்தருளினார். இராமாநுசரும் விழுவது தொழுவதாய் ஸேவித்து பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழிதாரத் தோள்" என்று விண்ணப்பம் செய்தார். நம்பெருமாளும் நீர் வந்த தூரத்துக்கு தகுமோ நாம் வந்தது என்று சொல்லிக் கொண்டே கர்ப்பக்ருஹம் சென்று சேர்த்தியிலே ஏறியருளினார். இராமாநுசரும் மணத்தூணே பற்றி நின்று வாயார வாழ்த்தி பாதாதி கேஸமாக ஸேவித்தார்.

பெரிய பெருமாளும் மிகவும் கருணையுடன் இராமாநுசருக்கு தீர்த்தம், திருமாலை, திருப்பரிவட் டத்தோடு ஸ்ரீசடகோபனையும் அருளினார். பின்பு, திருப்பவளவாய் திறந்து உபயவிபூதி (தாரணியும் விண்ணுலகும்) ஐச்வர்ய கைங்கர்ய ஸ்ரீயையும் நாம் உமக்குத் தந்தோம் நீர் உபய விபூதியையும் உடையவர் என்று திருநாமம் பிரஸாதித்தார்.

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்றவன் எம்பெருமான் என்று பெரியாழ்வார் பாடியபடியே ஈரரசையும் இராமாநுசருக்குக் கொடுத்தார் நம்பெருமாள். மேலும், கோயில் கார்யத்தை எல்லாம் ஆராய்ந்து நடத்தும்படி அருளினார். திருவரங்கத்தமுதனாரும் தாம் அருளிய இராமாநுச நூற்றந்தாதியில், வண்மையினாலும், தன்மாதகவாலும் மதிபுரையும் தண்மையினாலும் இத்தரணியோர்க்குத் தான் சரணாய் உண்மை நன்ஞானமுரைத்த இராமாநுசன் என்கிறார்.

அதாவது பொருளின் கௌரவத்தையும் உதவி செய்வதற்கு உருப்பான தம்முடைய வண்மை யாலும், துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாத பரம கருணையாலும், வெப்பத்தைப் போக்குவதாயும் குளிர்ச்சியை உண்டுபண்ணுவதுமான சந்திரனைப் போல தண்ணளியாலும், அறிவினால் குறைவு இல்லாத இந்த பூமியில் உள்ளார்க்கு தாமே காப்பாளராய்க் கொண்டு பிரிதொன்றுக்கில்லாத சிறந்த ஞானத்தை உபதேசித்தவர் இராமாநுசர் என்பர். இது காரணமாகவே தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் என்றபடி.

*இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்...*





# சித்திரை தந்த நற்பரிசு

திருமதி நளினி சம்பத்குமார்,
நங்கைநல்லூர், 97911 67583.

சித்திரை மாதத்திற்கு எத்தனை எத்தனையோ சிறப்புகள் இருக்கின்றன. அதில் முக்கிய மான சிறப்பு என்ன தெரியுமா? ஆசார்ய பக்தியைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த இரு மிகச் சிறந்த சீடர்களை சித்திரை மாத சித்திரை நட்சத்திரமே சிறப்பு பரிசாக நமக்கு வழங்கி இருக்கிறது. பெருமாளின் மீது மிகச் சிறந்த பரிவைக் காட்டிய ஒருவரையும் சித்திரை மாத சித்திரை நட்சத்திரமே தித்திப்பான பரிசாய் நமக்கு அளித்திருக்கிறது.

ஆசார்ய பக்தியை ஆதாரமாக, ஆகாரமாகக் கொண்டு தாங்கள் கொண்ட அந்த ஆசார்ய பக்தி யாலேயே பெருமாளின் அருளுக்குப் பாத்திரமான அந்த இரு சீடர்கள் யார் தெரியுமா? ஒருவர் "தேவு மற்றறியேன்" என்று நம்மாழ்வாரையே தெய்வ மாகப் போற்றி வணங்கி, "ஆசார்ய கடாக்ஷம் என்பது ஒருவருக்கு கிடைத்து விட்டால் போதும். தானாகவே தெய்வக்கடாக்ஷம் என்பது கிடைத்து விடும்" என்று காட்டிய மதுரகவியாழ்வார்.

இன்னொருவர், தம் ஆசார்யரான ஸ்வாமி இராமாநுஜர் திருமலையில் யாராவது நந்தவனம் அமைத்து திருமலையப்பனுக்கு தினம் புஷ்ப கைங்கர்யம் செய்ய முடியுமா? எனக் கேட்டதற்கு ஆசார்யரின் மீது தான் கொண்ட பக்தியின் வெளிப்பாடாய், தானே திருமலைக்குச் சென்று நந்தவனம் அமைத்து புஷ்ப கைங்கர்யம் செய்கிறேன் என்று சொல்லி தன் நிறைமாத கர்ப்பிணியான மனைவியுடன் வனமாய் இருந்த திருமலைப் பாதையைத் தாண்டி திருமலைக்குச் சென்று முதன் முதலில் அங்கே நந்தவனம் அமைத்த அனந்தாழ்வான். ஆசார்யன் மீது இந்த இருவர் காட்டிய அதே பக்தியைப் பரிவை காஞ்சி வரதராஜ பெருமாள் மீது காட்டிய ஆசார்யர் வரதகுரு என்கிற நடாதூர் அம்மாள்.

நாம் பகவான் மீது கொள்ளும் அன்பைத் தான் பக்தி என்கிறோம். பகவான் நம் மீது கொள்ளும் அன்பு தான் அருட்கடாக்ஷம். பகவானின் அருட் பார்வை என்பது நம் மீது பட, படர நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? ஆசார்யன் திருவடியைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வது தான்.

நம்மாழ்வாரை விட வயதில் மூத்தவர் மதுர கவி ஆழ்வார் என்ற போதிலும் தன்னை விட அவர் வயதில் இளையவராயிற்றே என்றெல்லாம் பாரா மல், நம்மாழ்வாரை ஆசார்யராக, தெய்வமாகக் கொண்டு வழிபட்டவர் மதுரகவி என்பதால் தானே, ஆழ்வாருக்குள் தனியொரு சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறார் மதுரகவி ஆழ்வார்!

*ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த*
*சீராரும் சித்திரையில் சித்திரை நாள் பார் உலகில்*
*மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும்*
*உற்றதெமெக்கென்று நெஞ்சே ஓர்*

என்று தம்முடைய "உபதேசரத்தின மாலை"யில் இவ்வாழ்வாரைப் போற்றி பாசுரம் இட்டிருக்கிறார் மணவாள மாமுனிகள்.

ஆழ்வார்களிலேயே மதுரகவி ஆழ்வாரின் திருஅவதார திருநாளை தான் நாம் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமாம். ஏன் தெரியுமா? மற்ற ஆழ்வார்களுக்கோ பெருமாளை நிரம்ப பிடிக்கும்

என்பதில் சந்தேகமே கிடையாது. ஆனால், தன் குருவின் மீது அபார பக்தி கொண்டு அந்த குருவையே பெருமாளாகப் போற்றி துதித்த மதுரகவி ஆழ்வாரின் மீது தனியொரு கூடுதல் பிரியமாம் பெருமாளுக்கு. “மதுரகவி நிஷ்டை” என்று ஆசார்ய பக்தியைக் காட்டி கொடுத்தவர் இந்த ஆழ்வாரே. நமக்குப் பெருமாளைக் காட்டித் தரும் ஆசார்யன் மீது உண்மையான பக்தியை நாம் செலுத்தி விட்டால் போதும் ஆசார்ய கடாக்ஷமும், பெருமாளின் கடாக்ஷமும் சேர்ந்தே நமக்குக் கிடைத்து விடும் என்பதை எடுத்துக் காட்டியவர் இவரே. துவாபர யுகத்தின் இறுதியில் திருஅவ தாரம் செய்த மதுரகவியாழ்வாருக்கு கலியுகத்தின் ஆரம்பத்தில் திருஅவதாரம் புரிந்த நம்மாழ்வாரின் மீது அப்படியொரு பக்தி. பெருமாளையே ஆசார்ய னாக மற்ற ஆழ்வார்கள் ஏற்றுக் கொள்ள ஆசார்ய னையே பெருமாளாகக் கொண்டு கொண்டாடியவர் மதுரகவி ஆழ்வார் என்பதாலேயே கொண்டாடப் படுபவர் மதுரகவியாழ்வாரே.

இனி எனக்கு பெருமாள் எம் ஆசார்யனே என்று மதுரகவி நம்மாழ்வாரையே தொழுது, அவரையே நினைந்து கொடுத்தது தான் “கண்ணி நுண் சிறுத்தாம்பு” என்று பதினோரு பாசுரங்கள் அடங்கிய உயர்வான, உயிரான பிரபந்த பாசுரம். நம்மாழ்வாரின் பிரபந்த பாசுரங்களை பட்டோலைப் படுத்திய பாக்கியத்தைப் பெற்ற ஆழ்வாரும் இவரே. சித்திரை சித்திரை நன்னாளில் மதுரகவி ஆழ்வாரை மனதில் கொண்டு தியானிப்போம்.

திருமலையில் தன் ஆசார்யரான சுவாமி இராமாநுஜர் சொல்படி நந்தவனம் அமைத்து, திருமலையப்பனுக்கு தினமும் புஷ்ப கைங்கர்யம் செய்த அனந்தாழ்வாருக்காக, அவருடைய ஆசார்ய பக்தியை மெச்சி ஆனந்த நிலைய வாசன் அவருக்கு அளித்த பரிசுகள் ஏராளம். அதில் மிகச் சிறப்பு வாய்ந்த பரிசு எது தெரியுமா? தாமே அனந்தாழ்வாரின் சீடன் என்று சொல்லிக் கொண்டு வைணவ அடியார்களின் முன் வந்து நின்று, அனந்தாழ்வாரின் மீது தானே தனியன் தந்தது தான். சுவாமி இராமாநுஜரை ஆசார்யனாகப் பற்றி, ஆசார்ய பக்தியை உயிர் மூச்சாகப் பாவிக்கும் அந்த அனந்தாழ்வானே எம் ஆசார்யன் என்று அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் அகில உலகிற்கும் காட்டி கொடுத்திருக்கிறான் என்றால் அந்த ஆசார்ய பக்தி எவ்வளவு மேன்மையானது!.

பெருமாளின் மீது தனியொரு பாசம் காட்டி பெருமாளாலேயே “அம்மா” என்று அழைக்கபெற்ற பெருமை பெற்ற நடாதூர் அம்மாளையும் சித்திரை சித்திரையே ஈந்திருக்கிறது. தம் ஆசார்யரான எங்களாழ்வான் மீது அதீத பக்தி கொண்டவர். அந்த ஆசார்யனின் அருள் அவரை பேரருளாளனின் அருளுக்குப் பாத்திரமாக்கிவிட்டது.

ஆம் காஞ்சி வரதராஜ பெருமாளின் மீது தாயைப் போல பாசம் வைத்தவர் தான் ஆசார்யர் வரதகுரு. ஒரு நாள் பெருமாளுக்கு நிவேதனம் செய்வதற்காக மடப்பள்ளியிலிருந்து சூடான பாலை அர்ச்சகர் சுவாமி எடுத்துக்கொண்டு வர, அர்ச்சகரை தடுத்து நிறுத்தி, பெருமாளுக்கு அந்த சூடு பொறுக் காதே என்று அந்த பாலை குளிர்ச்சிப் பெற செய்து பின் பாலை நிவேதனம் செய்ய வைத்து, வரதனின் வாயாலேயே “அம்மா” என்று அழைக்கப்பெற்று அன்று முதல் இன்று வரை நடாதூர் அம்மாள் என்றே அழைக்கப்பெற்ற ஆசார்ய சீலரையும் நினைவில் நிறுத்தி இவர்களுடன் கொண்டாடுவோம் .



ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டா என்ற கிராமத்தில் இராமாலய கருவறையில் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ள ஸ்ரீராமர், இலட்சுமணர், சீதை விக்கிரகங்கள் கிருதயுகத்தில் உருவான தாகக் கருதப்படுகிறது. சீதையின் விருப்பத்திற்கிணங்க ஸ்வாமியும் தனது அம்பை பூமியின் அடியில் செலுத்த, அவ்வில்லானது பாதாள கங்கையோடு வெளியே வந்தது. அந்நீரினை சீதையும் ஸ்ரீராமரும் பருகினர். இன்றும் இத்தீர்த்தம் “இராம தீர்த்தம்” என்ற பெயரோடு நமக்கு தரிசனமளிக்கிறது.

ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலம் 2014 ஆம் ஆண்டு ஆந்திரா மற்றும் தெலுங்கானா என்ற இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட போது, 2015 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் இந்த ஆலய நிர்வாகத்தை ஏற்று, அதற்கு அடுத்த ஆண்டு ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் ஆந்திர மாநில அரசு சார்பில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் மேற்பார்வையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆலய மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டது. ஸ்ரீசீதா ராம திருக்கல்யாணத்திற்கென்று ஒரு அழகிய கல்யாண மண்டபத்தை கடப்பா செல்லும் வழியில் அமைத்தது, வசதி குடில்களையும் அமைத்தது, பிற திருப்பணிகளையும் தேவஸ்தான நிர்வாகம் நிறைவேற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. 2016 ஆம் ஆண்டிலிருந்து லக்ஷக் கணக்கில் பக்தர்கள் இங்கு விமரிசையாக நடைபெறும் திருக்கல்யாண வைபவத்தைக் கண்டுகளிக்கின்றனர்.

## ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 05-04-2025 | சனி | ந்யாஸாபிஷேகம் | அங்குரார்ப்பணம் |
| 06-04-2025 | ஞாயிறு | துவஜாரோஹணம் | சேஷ வாகனம் |
| 07-04-2025 | திங்கள் | வேணுகானாலங்காரம் | ஹம்ஸ வாகனம் |
| 08-04-2025 | செவ்வாய் | வடபத்ரசாயி அலங்காரம் | சிம்ம வாகனம் |
| 09-04-2025 | புதன் | நவநீத கிருஷ்ண அலங்காரம் | ஹனுமத்சேவை |
| 10-04-2025 | வியாழன் | மோகினி சேவை | கருடசேவை |
| 11-04-2025 | வெள்ளி | சிவதனுர்பாணாலங்காரம் | வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம் |
| 12-04-2025 | சனி | திருத்தேர் | — |
| 13-04-2025 | ஞாயிறு | காளீய மர்த்தன அலங்காரம் | குதிரை வாகனம் |
| 14-04-2025 | திங்கள் | சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம் |

15-04-2025 செவ்வாய்க்கிழமை புஷ்ப யாகம் நடைபெறும்.




அலசுவோம்...

அறிவோம்...

ஆதிகாவிய நாயகர்களை...

# கைங்கர்யச் செல்வன் இலட்சுமணன்



– திரு.எஸ்.ஸ்ரீதுரை,காஞ்சிபுரம், 9486139685

ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பொறுத்த வரையில் முக்தி அடையும் ஒரு ஜீவாத்மா, ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து ஸ்ரீமஹாலக்ஷ்மித்தாயாருடன் கூடிய எம்பெருமானுக்குத் தொண்டு செய்து கொண்டிருப்பதே மிகப் பெரிய பேறு அல்லது புருஷார்த்தமாகக் கருதப்படுகின்றது.

ஆதிசேஷனின் அம்சமாகிய நம் லட்சுமணனோ ஸ்ரீவைகுண்டத்தில் செய்து கொண்டிருந்த தொண்டுகளை இப்பூவுலகிலும் தொடர்ந்து செய்ததுடன், ஸ்ரீராமாவதாரத் தின் முடிவில் மீண்டும் ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து தமது தொண்டுகளைத் தொடர்ந்தார் என்பது விசேஷமாகும்.

ஸ்ரீராமபிரான் அவதரித்த இக்ஷ்வாகு வம்சத்தின் குல குருவாகிய வசிஷ்டர் மகரிஷி ஸ்ரீராமர், இலட்சுமணன், பரதன், சத்ருக்னன் ஆகிய சகோதரர்கள் நால்வருக்கும் காரணப் பெயர்களையேச் சூட்டினார்.

சுமித்ரையின் புதல்வனாகிய லட்சுமண னுக்கு, "நீங்காத செல்வத்துடன் கூடியவர்" *"லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பன்ன:"* என்ற பொருளுடைய லட்சுமணன் என்ற திருப்பெயரைச் சூட்டியருளினார் குலகுரு. கைங்கர்யம் என்னும் பெரும் செல்வம் இலட்சுமணனிடத்தில் நிறைந்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

*சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்*
*நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்*
*புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்*
*அணையாம் திருமாற்கு அரவு*


என்ற பொய்கையாழ்வாரின் பாசுரம் ஆதிசேஷனின் கைங்கர்யச் சிறப்பை அதி அற்புதமாக விளக்குகின்றது. பரமபத மாகிய ஸ்ரீவைகுண்டலோகத்தில் தாம் புரிந்த கைங்கர்யத்தை இப்பூவுலகிலும் தொடர்ந்து புரிந்த காரணத்தால் "கைங்கர்யஸ்ரீமான்" என்று புகழப்பட்ட இளையாழ்வானுக்கு இலட்சுமணன் என்ற திருப்பெயர் மிகவும் பொருத்தமானதேயாகும்.

ஸ்ரீராமபிரானும், சீதாதேவியும் கைகேயியின் கட்டளையால் வனவாசம் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுது, "நானும் இவர்களுடன் வனத் திற்குச் செல்வேன்" என்று தயக்கம் ஏது மின்றிக் கிளம்பத் தயாரான இலட்சுமணன் உண்மையிலேயே ஓர் அதிசயப்பிறவிதான்.

ஸ்ரீராமனையும், சீதாப் பிராட்டியையும் போலவே இலட்சுமணனும் ஊர்மிளையும் இளம் தம்பதிகள்தாம். ஆனாலும், இல்லா ளுடன் இல்லற இன்பம் அனுபவிப்பதை விடவும், அண்ணனுக்கும் அண்ணிக்கும் தொண்டு செய்வதே முக்கியம் என்று கிளம் பியது மட்டுமின்றி வனவாசகாலம் முழுவ தும் தமது உறக்கத்தையும் லட்சுமணன் தியாகம் செய்தார் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒரு தியாகமாகும்.

வனவாசம் தொடங்கி சுமார் பத்து வருடகாலம் கழிந்தபின்பு, அகஸ்திய மகரிஷியின் அறிவுரைப்படி கோதாவரி நதி தீரத்தில் ஐந்து ஆலமரங்கள் ஒன்றாக வளர்ந்திருந்த பஞ்சவடி என்ற இடத்திற்குச் சென்று அங்கு ஒரு பர்ணசாலை (குடிசை)

அமைத்துக் கொண்டு மீதமுள்ள நான்கு வருட கால வன வாசத்தைக் கழிக்க முடிவு செய்தார் ஸ்ரீராமர். இதற்கு முன்பு தாங்கள் மூவரும் தங்குவதற்கான பர்ணசாலைகளைத் தனி ஒருவராக இலட்சுமணனே அமைப்பது வழக்கம். அதே போன்று பஞ்சவடியிலும் ஒரு பர்ணசாலையை எழுப்புவதைப் பற்றிப் பேசிய ஸ்ரீராம பிரான், "தம்பி இலட்சுமணா! இப்பஞ்சவடியில் இயற்கை வளம் நிறைந்திருப்பதுடன் நமக்கு வேண்டிய பழங்கள், கிழங்குகள் நிறைவாகக் கிடைக்கக் கூடியதாகவும், தண்ணீர், பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள், வைதீக காரியங்களுக்கு வேண்டிய தர்ப்பைப்புல் ஆகியவை நிறைந்திருக்கும் ஓர் இடத்தை நீயே தேர்ந்தெடுத்து புதிய பர்ண சாலையைக் கட்டுவாயாக! என்றார்.



அதற்கு இலட்சுமணர், "அண்ணா! இதைச் செய், அதைச் செய் என்று தாங்கள் இடுகின்ற கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமே இது வரையில் நான் அறிந்த விஷயமாகும். தற்பொழுது தாங்கள், நாம் தங்குவதற்கு ஏற்ற வசதியான இடம் ஒன்றை நானே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கட்டளையிடுவதைக் காட்டிலும், "இலட்சுமணா! நான் விரும்புகின்ற இந்த இடத்தில் பர்ண சாலையைக் கட்டு!" என்று குறிப்பிட்டு உத்தர விட்டால் அதனை உடனடியாக நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்று பதிலளித்தார்.



*''ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாம் இதி மாம் வத''* என்று இலட்சுமணன் கூறிய அந்த வார்த்தைகள் *''உன் தன்னோடு உற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்''* என்று ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாசுர வரிகளுக்கான பொழிப்புரையாகவே அமைந்து உள்ளது. இது மட்டுமல்ல, "ஸ்ரீராமபிரானும், சுக்கிரீவனும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதாக அக்னி சாட்சியாக ஒப்பந்தம் செய்து கொண்ட பொழுது, ஸ்ரீராமருக்கு மட்டும் ஆசனம் அளித்த சுக்கிரீவன், இலட்சுமணன் உட்காருவதற்கு ஆசனம் அளிக்க வில்லை. இது ஒரு பாகவத அபசாரம் அல்லவா? எனவே தான், முதல் முறை வாலியுடன் சுக்கிரீவன் சண்டையிடச் சென்ற பொழுது அவ்வாலியை ஸ்ரீராமர் கொல்லவில்லை. அதனால் சுக்கிரீவனும் அடிபட்டுத் திரும்பினான். அதுவே பாகவத அபசாரத்திற்கான தண்டனையாக அமைந்துவிட்டது'' என்று ஸ்ரீவைஷ்ணவப் பெரியவர்கள் விளக்கம் தருகின்றனர். இலட்சுமணன் இலங்கையில் நடந்த யுத்தத்தில் சக்தி எனப்படும் ஆயுதத்தால் அடி பட்டு நினைவின்றி இருந்த பொழுது ஸ்ரீராமர் கலங்கியதை அருமையானதொரு சுலோகத் தின் மூலம் அறியலாம்.

*தேசே தேசே களத்ராணி தேசே*
*தேசே ச பாந்தவா:*
*தம் து தேசம் ந பச்யாமி யத்ர*
*ப்ராதா சஹோதர:*

இவ்வுலகில் நாம் செல்லக் கூடிய தேசங்களில் எல்லாம் மனைவி, மக்கள், மாமனார், மாமி யார், மைத்துனன் உள்ளிட்ட பலவித மான உறவுகளைச் சம்பாதிக்கலாம். ஆனால், என் மனத்துக்குப் பிரிய மான இந்த இலட்சுமணனைப் போன்ற ஒரு சகோதரனைப் பெறு வது மிகவும் கடினமான விஷயமா கும்" என்று ஸ்ரீராமபிரான் கூறுவதாக அமைந்த இச்சுலோகம் ஒன்றே இலட்சுமணனின் பெருமைகள் அனைத்திற்கும் சான்றாக விளங்கு கின்றது.

தொண்டில் சிறந்த இலட்சுமண னின் பெருமைக்கு இதை விட வேறு சான்று ஒன்று வேண்டுமா என்ன?

**இறுதியாக ஒன்று...**

ஸ்ரீமத்ராமாயணத்தைத் தேனி னும் இனிய தமிழ்க் கவிதைகளைக் கொண்டு பாட முன் வந்த கவிச் சக்கரவர்த்தி கம்பர், தொண்டில் சிறந்த இலட்சுமணனையும், அன்ற லர்ந்த செந்தாமரையை வென்ற திருமுகத்தினை உடைய ஸ்ரீராம பிரானையும் பாத்திரங்களாக வைத்து அருமையான பாசுரங்கள் பலவற்றைப் பாடியுள்ளார். அவற் றுள், நமக்கு நேரும் துன்பங்க ளுக்குப் பிறரைக் காரணமாகக் கூறிப் பழிக்காமல், எல்லாம் விதியின் செயல் என்று அமைதியுடன் ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவத்துடன் வினையாற்ற வேண்டும் என்பதை விளக்கும் அற்புதமான பாசுரம் ஒன்றை அருளியுள்ளார்.

"நதியின் பிழையன்று
நறும்புனல் இன்மையற்றே
பதியின் பிழையன்று பயந்த
நமைப் புரந்தான்
மதியின் பிழையன்று மகன்
பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ இதற்கு
என்கொல் வெகுண்டது?

என்றான்.

பரதனுக்கு அரச பதவி கிடைக்க வேண்டும் என்ற ஆசையினால் ஸ்ரீராமபிரானை வனவாசம் செல்லுமாறு பணித்த கைகேயின் மீது கோபம் கொண்ட லட்சுமணனை சமாதானப்படுத்துகிறார் ஸ்ரீராமன்.

குழந்தாய் இலட்சுமணா! நறுமணத்துடன் கூடிய குளிர்ந்த நீர் ஓடிக்கொண்டிருக்கும் நதி ஒன்று வற்றிப் போனால் அதற்கு அந்த நதியைக் குற்றம் சாட்ட முடியுமா? அது போன்றே, நாம் வனவாசம் செல்ல வேண்டியிருப்பதற்காக நம் தந்தை தசரதச் சக்கரவர்த்தி, நம் அன்புத் தாயாகிய கைகேயியின் சிந்தனை ஓட்டம், அவளுடைய திருவயிற்றில் உதித்த பரதாழ்வான் ஆகிய யாரையும் குறை கூறுவதில் பொருள் ஒன்றும் இல்லை. நடந்தது அனைத்திற்கும் நமது விதியே காரணமாகும். எனவே இதன்பொருட்டு நீ யாரையும் கோபிப்பது கூடாது என்று அறிவுரை கூறுவதாக அமைந்துள்ள இப்பாசுரம் நமது வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஏற்றத்தாழ்வுகளை எவ்விதம் அமைதியாக எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கின்றது.

கைங்கரியச் சிறப்பினால் நமது மனங்களில் சம்பவிக்கும் இலட்சுமணன், கவிச்சக்கரவர்த்தியின் கருத்தாழம் மிகுந்த பாசுரம் பிறக்கக் காரணமான தம்முடைய அறச்சீற்றத்திற்காகவும் நமது வணக்கத்திற்குரியவராகத் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

தொடர்ந்து அலசுவோம்...

## குறுக்கெழுத்துப்புதிர் 105கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | மா | லி | ன் | அ | வ | தா | ர | ம் | | |
| ரு | | 2 கு | ர | ங் | கு | க | ர | டி | க | மு | கு |
| ப் | 3 உ | 4 மா | ஸ் | தி | 5 ர | ம் | | 6 கோ | யா | ம் | |
| பு | த் | | | | கு | ய | | த | டி | ன | டி |
| ல் | தி | 7 ந | யூ | ர | 8 ச | ஜெ | கி | ண் | ஷ் | த | வ |
| லா | ர | ந் | | | | ம | ன | ட | மோ | ந் | ரு |
| ணி | பி | தி | | | | 9 ரா | 10 ஜா | ம் | கா | 11 ப | தி |
| | ர | கி | 12 வி | ஸ் | வா | மி | த் | தி | ர | ர் | ன் |
| க | தே | 13 ரா | ம | ஜெ | ன் | ம | பூ | மி | தி | | ரி |
| ட | ச | 14 ம | து | ரா | ந் | த | க | ம் | த் | | ம |
| ண் | ம் | ம் | ன | மா | வி | க | ப | ஷ் | 15 பு | | ரா |
| 16 த | | 17 ஏ | மூா | ம் | ன | மா | வி | க | ங் | ர | 18 ஸ்ரீ |

ஆயுர் வேதம்



# ஆரோக்கியம் அருளும் திராட்சை



**தெலுங்கு மூலம்:**
**டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.**
**தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.**

திராட்சை பச்சை, கருப்பு மற்றும் சிவப்பு நிறங்களில் கிடைக்கின்றது. அதை உலர்த்திய பின் உலர்ந்த திராட்சை கிடைக்கிறது.

உலர்ந்த திராட்சை 100 கிராம், இஞ்சி 20 கிராம், 20 கிராம் சோம்பு, 10 கிராம் மிளகு, 10 கிராம் சைந்தவ லவணம் ஆகியவற்றை பொடிசெய்து, நாள்தோறும் ஒரு முறை நாம் உண்ணும் உணவோடு சேர்த்து உண்டால் செரிமானக் கோளாறுகள் நீங்கும்.

200 மி.லி. நீரில் 10 உலர்ந்த திராட்சைகள், அரை டீஸ்பூன் இடித்த வேப்பங்கொழுந்து, அரைடீஸ் பூன் பனைவெல்லம் ஆகியவற்றைப் போட்டு 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறியபின் வடிகட்டி இரண்டு வேளை 50 மி.லி. வீதம் குடித்து வந்தால் சிறுநீரகக் கோளாறு நீங்கும்.

நாள்தோறும் 3,4 முறை 100 மி.லி. நீரில் 10 கிராம் வீதம் உலர்ந்த திராட்சை, சீரகப்பொடி, கொத்த மல்லிப் பொடி ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு அரைத்து அதனை நன்கு வடிகட்டி குடித்து வந்தால் உடம்பில் ஏற்படும் தடிப்புகள் மறையும்.

உலர்ந்த திராட்சை, மிளகு, அதிமதுரம், கற்கண்டு ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து நன்கு பொடியாக்கி சிறு உருண்டைகள் செய்து நன்கு காயவைத்துக் கொள்ள வேண்டும். மூன்று வேளை உணவு உட்கொண்ட பின் அதனை ஒரு மாத்திரை வீதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் சளி, இருமல் குறையும்.

நாள்தோறும் இரவு படுக்கும் முன் தகுந்தளவு நீரில் 20 உலர்ந்த திராட்சை, ஒரு டீஸ்பூன் கொத்த மல்லி போட்டு 10–15 நிமிடம் ஊற வைத்து அரைத்து 200 மி.லி. நீரில் கலந்து அதனுடன் அரை டீஸ்பூன் பனங்கற்கண்டும் சேர்த்து நன்கு கொதிக்க வைத்து, வடிகட்டி குடித்து வந்தால் மலச்சிக்கல் தீரும்.

நாள்தோறும் இரவு 20–40 உலர்ந்த திராட்சை களை தகுந்தளவு நீரில் போட்டு இரவு முழுவதும் நன்கு ஊறவைத்து, காலை அதனை பசை போன்று மிருதுவாக அறைத்து ஒரு கிராம் அளவு அதிமதுரப் பொடி ஸ்ரீகந்தம்பொடி ஆகியவற்றைக் கலந்து உட்கொண்டால் வாய், மலம், சிறுநீர் துவாரங்களில் இருந்து வரும் இரத்தப் பிரச்சனைகள் நீங்கும்.

நாள்தோறும் இரவு நேரத்தில் உலர்ந்த திராட்சையை 100 மி.லி. நீரில் போட்டு ஊற வைத்து, அவற்றை உண்டு, அந்நீரையும் குடித்து வந்தால் இரத்தம் அதிகரிக்கும். நாள்தோறும் ஓரிரண்டு முறை, வேளைக்கு 200 மி.லி. நீரில் 10–15 திராட்சை, ஒரு வெற்றிலை, இடித்த லவங்கம் ஆகியவற்றை 100 மி.லி. நீர் ஆகும் வரை கொதிக்க வைத்து ஆறியபின் குடித்தால் இருமல் குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தரத் தீர்விற்கு அல்ல.

**பிழை திருத்தம்...**

**ஸப்தகிரி, மார்ச் 2025 மாத இதழில் பக்கம் எண். 46 இல் இடம் பெற்ற ஆயுர்வேதம் பகுதியில் தலைப்பிலும், கட்டுரையிலும் பிரியாணி இலை எனக் குறிப்பிடப் பட்டுள்ளவற்றிற்கு பதிலாக அதன் ஆயுர்வேதப் பெயரான தமாலபத்ர இலை என்று மாற்றி வாசிக்கவும்.**



# ஏப்ரல் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில்துறையில் அலைச்சலும், விரயங்களும் அதிகமாகும், தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் மிகுந்த கருத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறமுடியும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. சித்திரை 1 ஆம் தேதி முதல் செல்வாக்கு உயரும். பெண்களுக்கு முன்னேற்றம் உண்டு. தெய்வ பக்தியால் முன்னேறும் மாதமிது.

**ரிஷபம்**

தொழில்துறையில் நல்ல லாபம் கிடைக்கும். அலைச்சல் காரணமாக ஆரோக்கியம் சற்று குறையும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண் பெறுவர். மருத்துவத்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். பெண்களுக்கு குடும்பத்தில் நல்ல பெயர் கிடைக்கும். முயற்சியின் பேரில் முன்னேறும் மாதமிது.

**மிதுனம்**

தொழில்துறையில் புதிய முயற்சிகளால் வெற்றி பெறுவீர். கண்களில் சிறு கோளாறு ஏற்பட்டு சரியாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பிறரிடம் பேசும் போது விவாதத்தைத் தவிர்க்கவும். தொழில் வளர்ச்சிக்கு செலவு அதிகமாகும். வெளிநாடு செல்ல யோகம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று நல்ல கல்லூரிகளில் சேருவர். பொதுவாக வெற்றி தரும் மாதமிது.

**கடகம்**

மாத ஆரம்பத்தில் திடீர் மனக்குழப்பம் உண்டாகும். ஏப்ரல் 14ஆம் தேதிக்குப் பின்னர் ஆரோக்கியம் மேம்படும். தொழில் துறையில் அலைச்சல் அதிகமாக இருக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. குழந்தைகளுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. உடல் அசௌகர்யம் நீங்கி நல்ல ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பார்த்த வெற்றியை கடவுள் அருளால் பெறும் மாதமிது.

**சிம்மம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. சுகாதாரமில்லாத இடங்களில் உணவு உண்பதைத் தவிர்க்கவும். தண்ணீர் அதிகமாக உள்ள இடங்களில் விளையாடுவதையும், சாகசம் செய்வதையும் தவிர்க்கவும். தொழில்துறையில் மாற்றம் செய்ய வேண்டிய மாதமிது. ஏப்ரல் 14 ஆம் தேதிக்குப் பின்னர் நல்ல ஆரோக்கியம் உண்டாகும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**கன்னி**

தெய்வ தலங்களுக்கு யாத்திரை செய்து தரிசனம் கிடைக்கப் பெறுவீர். மனைவியின் நல்ல யோசனை கிடைக்கும். மூத்த சகோதரரின் ஆரோக்கியத்தில் மிகவும் கவனம் தேவை. மாணவர்கள் ஓரளவு நல்ல மதிப்பெண் பெறுவர். பெண்களுக்கு மனக்குழப்பம் உண்டாகும். காட்டுத் தொழில் செய்பவர்களுக்கு சிறு பிரச்சனை உண்டாகி சரி ஆகும். தெய்வ நம்பிக்கையின் மூலம் முன்னேறும் மாதமிது.

**துலாம்**

கடன் வாங்குவதையும், ஜாமின் போடுவதையும் தவிர்க்கவும். ஆரோக்கியத்தில் மிகக்கவனம் தேவை. அஜீரணம் ஏற்படுத்தும் உணவுகளைத் தவிர்க்க வும். தொழிலில் அலைச்சல் மிகுதியாக இருக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகக்கவனம் தேவை. கூட்ட மான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். பண விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**விருச்சிகம்**

பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். குடும்ப ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய முயற்சிகளில் சிரமமும் பின்னர் வெற்றியும் கிட்டும். தொழிலில் மிகுந்த அலைச்சல் ஏற்படும். பெற்றோரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தோஷ பரிகாரங்கள் செய்ய ஏற்ற மாதமிது. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

தொழிலில் போட்டிகள் மிக அதிகமாக இருக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகக்கவனம் தேவை. பூர்வீகச் சொத்துகள் குறித்து தற்போது பேச வேண்டாம். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**மகரம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பகள் அமையும். சகோதரர் வகையில் இருக்கும் குழப்பம் தீரும். தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் விரிவாக்கத்தில் ஈடுபடலாம். பூர்வீகச் சொத்துக்கள் குழப்பத்தின் பேரில் கிடைக்கும். மாணவர்கள் மனக் குழப்பத்தால் எதிர்பார்த்ததை விட குறைவான மதிப்பெண் பெறுவர். கடும் முயற்சியால் முன்னேறும் மாதமிது.

**கும்பம்**

தொழிலில் போட்டியும், அலைச்சலும் அதிகமாக இருக்கும். குடும்பத்தில் குழப்பமான சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத்திற்கேற்ற மருத்துவம் கிடைக்கும். திடீர் தனவரவு உண்டு. பிரயாணத்தில் இருந்த சிரமங்கள் சரியாகும். எச்செயலும் தாமதமாக நிறைவேறும். குடும்ப உறுப்பினர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும். பிரச்சனைகளிலிருந்து தெய்வ பலத்தினால் விடுபடும் மாதமிது.

**மீனம்**

மனக் குழப்பத்தினால் தூக்கமின்மை ஏற்படும். தம்பதியிடையே அன்யோன்யம் ஏற்படும். சகோதரரால் நன்மை உண்டு. தொழிலில் புதிய முயற்சிகளைச் செய்யலாம். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. மாணவர்கள் மிகவும் பொறுப்புடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெண்களுக்கு ஏற்றம் உண்டு. மனக் குழப்பமேற்பட்டாலும் முன்னேற்றம் தரும் மாதமிது.




# நல்ல நட்பு

-திரு. கே. இராமநாதன்,
சேலம், 94433 22202.

முன்பொரு காலத்தில் அடர்ந்த காட்டில் ஒரு மான், ஒரு ஆமை, ஒரு காகம் ஆகியவை நட்புடன் வாழ்ந்து வந்தன. ஒரு சமயம் அங்கே வந்த ஒரு நரி அவைகளுடன் இனிமையாகப் பேசி தன்னையும் அவர்களின் நட்புடன் இணைத்துக் கொண்டது. அவை நான்கும் தங்களுக்குள் உதவி செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்து வந்தன. தந்திர குணம் கொண்ட நரியின் மனதில் வஞ்சக எண்ணம் தலைதூக்கியது. அது, இவர்கள் மூவருடன் வாழ்வதால் எனக்கென்று என்ன தனிச் சிறப்பு உள்ளது. எனவே எனக்கென்று தனியாக நன்மை கிடைக்கும் வழியைத் தேட வேண்டும் என்று எண்ணியது.

நரி ஒரு நாள் அந்தக் காட்டின் அரசன் போல் வாழ்ந்து வந்த சிங்கத்தைச் சந்தித்தது. அது சிங்கத்திடம் இனிய மொழிகள் பேசி அதை நட்பாக்கிக் கொண்டது. பல நாட்கள் இரை எதுவும் கிடைக்காமல் சிங்கம் சோர்வுடன் இருந்தது.

அந்தச் சூழலைத் தன் நன்மைக்குப் பயன்படுத்த விரும்பிய நரி சிங்கத்திடம், நான் உன் பசியைப் போக்கிட கொழுத்த மான் ஒன்றைப் பிடித்துத் தருகிறேன். நீ அதற்குப் பரிசாக என்னை உன் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றது. பசியில் இருந்த சிங்கமும் நரி கூறியதை ஏற்று, சரி என் உணவுக்கு மானை அழைத்து வா, நான் எப்போதும் உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன் என்றது.

அதைத் தொடர்ந்து நரி தன் பழைய நண்பர்கள் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. அது முன்பு போலவே மிக இனிமையாக அவர்களுடன் பேசி மகிழ்ந்து தங்கியிருந்தது. ஒரு நாள் தந்திர நரி தன்மீது அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த மானிடம், நான் உனக்கு அழகான பசுமை நிறைந்த மேய்ச்சல் நிலத்தைக் காட்டுகிறேன். அங்கே உனக்குத் தேவையான உணவு கிடைக்கும் என்றது.

நரியின் இனிய பேச்சில் மயங்கிய மான் அதனுடன் வெகுதூரம் சென்றது. அப்போது அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதியில் பதுங்கியிருந்த சிங்கம் நரி அழைத்து வந்த அந்த மான் மீது பாய்ந்தது. விழிப்புடன் இருந்த மானோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு அங்கிருந்து தப்பி ஓடியது.

உயிர் தப்பிய மான் தன் நண்பர்களைச் சந்தித்து நடந்த உண்மையைக் கூறியது. அது கேட்ட காகமும் ஆமையும் தந்திரக்கார நரியின் பேச்சில் இனிமை இருந்தாலும் அதன் மனதில் இருந்த வஞ்சகத்தை நாம் முன்பே அறிந்து கொள்ளாமல் இருந்து விட்டோம். எனவே இனி நரியுடன் கொண்டிருந்த நட்பை விட்டுவிடுவதே நல்லது என்று கூறின.

தன் வஞ்சகத்தால் நரி நல்ல நண்பர்களை இழந்தது. அத்துடன் அது தன் செயலால் பசியுடன் இருந்த அந்தச் சிங்கத்திற்கு இரையும் ஆனது.


துளசிதாசர் தம் இராமசரித மானஸில், நம் முன்னால் இனிய மொழி பேசி, நம் முதுகின் பின்னால் தீமை செய்யும் கயவர்களின் நட்பைத் துறப்பதே வாழ்வில் மிகப் பெரிய நன்மை என்கிறார். அதுபோல் முகத்திற்கு நேராக இனிய மொழி பேசி, பின்னால் தீங்கு செய்யும் நரி போன்றவர்களின் நட்பைத் துறப்பதே மேல்.

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

## சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!



கீழே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்

அ) ஸ்ரீராமாயணத்துடன் தொடர்புடையவை


ஆ) திருப்பாற்கடலுடன் தொடர்புடையவை

இ) தமிழ் வருடப்பிறப்புடன் தொடர்புடையவை

விடைகள் : அ = 2,4,11,12; ஆ =1,3,8,10;
இ = 5,6,7,9

அனுமன் சீதா தேவியிடத்தேச் சென்றடைய பாதையைத் தேர்ந்தெடுங்கள்!

சரியான பாதையைக் கண்டுபிடி



## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

தடுமாறேல் மனம், இடம் மாற்றானுக்கு
கொடேல், சொல்லேல் மிகைபடச்,
விரும்பேல் மீதூண், முகத்து முனை
நில்லேல், இணங்கேல் மூர்க்கரோடு.

மனம் தடுமாறேல், மாற்றானுக்கு
இடம் கொடேல், மிகைபடச்
சொல்லேல்,மீதூண் விரும்பேல்,
முனைமுகத்து நில்லேல், மூர்க்கரோடு
இணங்கேல்.

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-33

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. "விஷு" என்னும் சொல்லிற்கான பொருள்............................................................................................
2. திருநீர்மலை திவ்யதேசத்தில் கொலுவீற்றிருக்கும் நரசிம்மரின் திருநாமம் ..............................................
3. புனர்வசு நட்சத்திரத்திற்கு ஏற்றம் அளித்தவர்........................................................................................
4. சித்திரை ஐப்பசி சம பகலிரவு காலம் எனக் கூறும் புராணம் .....................................................................
5. ஆந்திர மாநிலம் ஒண்டிமிட்டாவில் அருள்புரியும் இராமரின் திருநாமம் .......................................................
6. "கற்பார் ராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" எனப் பாசுரமிட்டவர் ..........................................................
7. இராமாநுசரை காஞ்சியில் இருந்து திருவரங்கம் அழைத்து வந்த ஆசாரியர்...................................................
8. 108 திவ்ய தேசங்களில் தர்ப்பை சயன இராமர் கொலுவீற்றிருக்கும் திவ்ய தேசம் ........................................
9. திருநீர்மலை திவ்ய தேசத்தின் தல விருக்ஷம் ..........................................................................................
10. மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் பூர்ண அவதாரங்கள் .............................................................................
11. இராமாயணத்தில் கைங்கரியச் செல்வன் எனப் போற்றப்படுபவர் ...................................................................
12. தமிழ் வருடப் பிறப்பினைப் பற்றிக் குறிப்பிடும் அகத்தியரின் நூல் ...............................................................
13. "விருஷகிரி ஈஸ்வர" என்பதன் பொருள் .....................................................................................................
14. அனந்தாழ்வான் அவதரித்த மாதம், நட்சத்திரம் ........................................................................................
15. தென் தமிழகத்தில் சித்திரை விஷுகனி தரிசனம் நடைபெறும் மாநிலம்.........................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.04.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

| | |
|---|---|
| ஸ்ரீராமருக்கு படகு ஓட்டியவன் | |
| ஸ்ரீராமரின் திருப்பாத தூளிப் பட்டு சாபவிமோசனம் பெற்றவர் | |
| ஸ்ரீராமர்-சீதை இருப்பிடத்திற்கு மாயமானாக வந்தவன் | |
| இலட்சுமணனுக்காக சஞ்சீவினி மூலிகையைக் கொண்டு வந்தவர் | |
| இராவணனின் மனைவியின் பெயர் | |
| ஸ்ரீராமரின் தந்தை பெயர் | |
| ஸ்ரீராமருடன் போரிட்டு மாண்ட வானரவீரன் | |
| ஸ்ரீராமரின் பாதுகைகளைக் கொண்டு அரசாண்டவர் | |

அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!




**விடைகள்**

1) குகன், 2)அகலிகை, 3) மாரீசன், 4)அனுமன்,
5) மண்டோதரி, 6) தசரதன், 7) வாலி, 8) பரதன்.

## கணித விளையாட்டு

இங்கு விற்களில்
உள்ள கணித விடைக்குப் பொருத்தமான அம்புகளின்
தொகுப்பினை பொருத்துக




**விடைகள்**

1) i, 2) iv, 3) iii, 4) vi, 5) v




*இங்குள்ள விலங்குகள், பறவைகளில் இராமாயணத்தில் இடம் பெறுபவை எவை?*

**விடை : 1,2,3,5**

சித்திர கதை

# ஸ்ரீராமரின் நற்குணங்களைப் பெறுவோம்!

கதை மூலம் :திரு. கே.வி.அப்பலாசார்யுலு
சித்திரம் :திரு. கோடி அங்கபாரி





தசரதனின் மைந்தரான இராமர் தம் சகோதரர்களான பரதர், லக்ஷ்மணர், சத்ருக்கனருடன் பாசத்துடன் பழகியது சகோதர பாசத்திற்கு ஒரு எடுக்காட்டாகும் அல்லவா.

இராமரைப் போன்ற சீடனும், விஷ்வாமித்திரைப் போன்ற குருவும் படைப்பிலேயே இல்லை எனலாம். இவர்கள் சிறந்த குரு–சீடன் உறவிற்கு எடுத்துக்காட்டாவார்கள்.



தந்தை சொல்படி, இராமன் தன் மனைவி, தம்பி லக்ஷ்மணனுடன் 14 ஆண்டுகள் வனவாசம் சென்றன் மூலம் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்ததை அறியலாம்.

முனிவர்களின் வேண்டுகோளின்படி, கௌசல்ய இராமன் அசுரர்களிடம் இருந்து முனிவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தார்.




கௌதம முனி ஆசிரமத்தில் கல்லாக இருந்த அகலிகை இராமரின் திருப்பாதத் தூளிப்பட்டு மீண்டும் பெண்ணாக மாறி சாபவிமோசனம் அடைந்தாள்.

பின்னர் இராமலக்ஷ்மணர் இருவரும் அகலிகை மற்றும் கௌதம முனிவரிடமிருந்து விடைபெற்று சென்றனர்.



தன் தந்தையின் நண்பரான ஜடாயு என்ற பறவைக்கு இறுதிச் சடங்கைச் செய்து மோட்சத்தை அளித்ததால் அவருடைய பக்தவாத்சல்யத்தை நாம் அறிய முடிகிறது.



வானரத் தலைவனான சுக்ரீவனின் நட்பைப் பெற்ற இராமன் நட்பு எனும் உறவிற்கு உன்னதமானவராக விளங்கி, நட்பின் இலக்கணமானார்.



வானரமான அனுமனின் பக்தியை ஏற்று தன் மார்புடன் கட்டி அணைத்து தனது கருணை உள்ளத்தைக் காட்டினார் ஸ்ரீராமர்.



வானரங்களின் பேருதவியுடன் தென்திசையில் கடலின்மீது பாலத்தை அமைத்ததன் மூலம் அவருடைய விஞ்ஞான சாஸ்திர அறிவை அறிய முடிகிறது.



அநீதி இழைப்பவர்களுக்கு அழிவு நிச்சயம் என்பதை ஸ்ரீராமரின் இராவண வதம் நமக்கு பாடம் புகட்டுகிறது.



ஒரு சொல், ஒரு இல், ஒரு வில் எனும்படி கல்யாண குணம் கொண்ட ரகுராமன் அயோத்தியா மாநகரை ஆயிரம் ஆண்டு ஆட்சி புரிந்தது இராம ராஜ்ஜியம் என்று இன்றும் போற்றுகிறோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _________________
(பெரிய எழுத்துக்களில்) _________________
_________________
_________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர் களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும்*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.




18-02-2025 அன்று வாரணாசியில் தி.தி.தே. சார்பில் நடைபெற்ற ஶ்ரீஶ்ரீநிவாச திருக்கல்யாண உத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



12-02-2025 அன்று திருமலையில் உள்ள சேஷாசல வனத்தில் மகர மாத பௌர்ணமியில் (தை மாதப் பௌர்ணமி) நடைபெற்ற இராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி விழா. ஶ்ரீராமகிருஷ்ணருக்கு ஆரத்தி சமர்ப்பிக்கும் அர்ச்சக சுவாமி



22-02-2025 அன்று பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஶ்ரீசைலம் ஶ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்தி ரங்களைச் சமர்பித்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



28-02-2025 அன்று பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஶ்ரீகாளஹஸ்தி ஶ்ரீகாளஹஸ்தீஸ்வர ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்பித்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



10-02-2025 அன்று திருமலையில் திருவேங்கடமுடையானைத் தரிசித்த ஆந்திர மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு.சிராஜ்சிங் தாகூர் அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சிஎச். வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ்.அவர்கள்



23-02-2025 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவி ஏற்ற ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை செயலாளர் திரு.வி.வினய்சந்த் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-03-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

